பக்கங்கள்: 12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 06 திங்கட்கிழமை 19.04.2021 கதிர் 165

### இனி அது ரகசியம் அல்ல!

உகண்டாவுக்கு மூன்று விமானங்களில் அச்சிடப்பட்ட விடயங்கள் அடங்கிய பொதிகள் இலங்கையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டமை குறித்து நேற்று இப்பத்தியில் கோடி காட்டியிருந்தேன். எதிர்பார்க்கப்பட்டபடி நேற்றுக் காலையில் கொழும்பு பக்கம்02

# அன்னை பூபதியை இன்று நினைவு கூர அவர் மகளுக்கும் கூட அனுமதியில்லை




## பயங்கரவாதத் தடைச் சட்டம் பாயும் என பொலிஸ் தரப்பு நேரடியாக எச்சரிக்கை



மட்டக்களப்பு, ஏப்ரல் 19

அஹிம்சை வழியில் போராடி உயிர் நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு தினம் இன்றாகும். இன்று அவரது சமாதிக்கு சென்று அனுஷ்டித்தால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவீர்கள் என காத்தான்குடி பொலிஸார் தங்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்று அன்னை பூபதியின் மூத்த மகள் திருமதி லோகேஸ்வர் சாந்தி தெரிவித்தார். ☞2

## யாழில் மேலும் 13 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டியுள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள், பணியாளர்கள் 11 பேர் உட்பட யாழ்.மாவட்டத்தில் மேலும் 13 பேருக் குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் 386 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 13 பேர் உட்பட 14 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ☞2

## இலங்கையில் மீண்டும் கொரோனா தாண்டவம்



### இராணுவத் தளபதி எச்சரிக்கை நேற்று 357 பேருக்குத் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று திடீரென மீண்டும் அதிகரித்துள்ளது.

நேற்று மட்டும் 357 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இவர்களில் 260 பேர் ஏற்கனவே கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் எனவும் ☞2

## வடக்கு உட்பட மூன்று மாகாணங்களுக்கு கொரோனா வைரஸ் அபாய எச்சரிக்கை!

சித்திரைப் புத்தாண்டு பண்டிகைக் காலத்தைத் தொடர்ந்து வடக்கு உள்ளிட்ட மூன்று மாகாணங்களில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் தொகை அதிகரிக்கக்கூடும் எனப் பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

வடக்கு மாகாணம், மேல் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களில் தொற்று பரவல் வேகமடையலாம் என அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ☞2

## கொரோனாச் சாவு 618 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

பிட்டபெத்தரவை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதான ஆண் ஒருவர், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றாளராக ☞2

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யாழ்.பல்கலையில் 23 மீளத் திறப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்தில் மீள அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

தமது அழைப்பின் பேரில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராசா அதனை திறந்து வைப்பார் எனப் பல்கலை மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ☞2

## முரளிதரனுக்கு திடீர் மாரடைப்பு சென்னை அப்பலோவில் அனுமதி



இலங்கையின் முன்னாள் நட்சத்திரப் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நேற்று இரவு சென்னை அப்பலோ மருத்துவமனையில் அவசரமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றார் என செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டே அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என தமிழகத் ☞2

## யாழ்., கிளிநொச்சியில் 9 பாடசாலைகளை உடைத்து 40 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் திருட்டு

### மூன்று இளைஞர்கள் வசமாகச் சிக்கினர்; குற்றத் தடுப்புப் பொலிஸார் தீவிர விசாரணை

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 9 பாடசாலைகளை உடைத்து 40 இலட்சம் பெறுமதியான இலத்திரனியல் கற்றல் உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, முழங்காவில், குமுழமுனை ஆகிய பகுதிகளைச் ☞2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆங்கில வார இதழ் ஒன்றில் பரபரப்பான முன்பக்கச் செய்தியாக அது பிரசுரமாகியிருந்தது.

கொஞ்ச நஞ்சமல்ல, 102 மெற்றிக் தொன் பொருள்கள். என்ன, ஏது என்று தேடிப் பார்த்தேன். அச்சிடப்பட்ட புத்தம் புது நோட்டுகள் அவை என்றன தம்மை அடையாளம் காட்டவிரும்பாத – விடய மறிந்த – தரப்புகள்.

உகண்டா நாட்டின் கரன்ஸி நோட்டுகள் இங்கு பாதுகாப்பாக அச்சிடப்பட்டு அந்த நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்ற காரணமும் கூறப்பட்டது. அது உண்மையோ, பொய்யோ தெரியவில்லை. எல்லாம் ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

★ ★ ★

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் உருவாக்க காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில்தான் தேர்தல்களில் போட்டியிட்டது. அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, செயலாளர் நாயகம் சம்பந்தன். ஆனந்தசங்கரியின் போக்கினால் கட்சிக்குள் குழப்பம். ஆனந்தசங்கரி ஒரு பக்கம்; சம்பந்தனும் மாவை சேனாதிராசா உட்பட மற்றைய பெரும்புள்ளிகள் எல்லாம் மற்றப் பக்கம். ஆனால் நீதிமன்றத்தில் தனித்து நின்ற சங்கரிக்கு சமனானவர்களாக சம்பந்தன் அணியால் match பண்ண முடியவில்லை. சம்பந்தனினால் கட்சிப் பிடியைக் காப்பாற்ற முடியவில்லை. பறிபோனது உதயசூரியன் சின்னம். நீதிமன்றத்திலிருந்து ஏமாந்து திரும்பினார் சம்பந்தன்.

தந்தை வளர்த்த உதயசூரியனையும் கூட்டணியையும் பறிகொடுத்தாயிற்று. என்றாலும் தந்தையே உருவாக்கிய தமிழரசும், வீடும் கை கொடுத்தன.

உதயசூரியனை சம்பந்தன் பறிகொடுத்தமை போல, வீட்டையும் தமிழரசையும் மாவை சேனாதிராசா பறிகொடுக்காமல் இருந்தால் சரி.

சம்பந்தன் உதயசூரியனைப் பறிகொடுத்த போது கட்சியில் அவருக்குப் பக்கத்தில் சுமந்திரன் இருக்கவில்லை. ஆனால் அதற்காக இப்போது சுமந்திரன் பக்கத்தில் இருக்கின்றார் என்ற துணிச்சலில் மாவை சேனாதிராசா வாளாவிருக்க முடியாது. அதற்கு இரண்டு காரணங்கள். முதல் காரணம் நான் கூறப்போவதில்லை. அதை வாசர்களே ஊகிக்கட்டும். அடுத்தது – சுமந்திரனையும் மீறிக் கூட கட்சி தேர்தல் சமயத்தில் முடக்கப்படும் நிலை வரலாம்.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா சமயோசிதமாக – புத்திசாதுரியமாக – நடக்காவிட்டால் இப்போதுள்ள சூழலில் எதுவும் நடக்கலாம். இந்த முன்னெச்சரிக்கையைத் தமிழரசுத் தூண்கள் பதிந்து வைத்துக்கொள்வது நல்லது.

இப்போது இருக்கும் தேர்தல் ஆணையம் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சுதந்திர தேர்தல் ஆணையம் அல்ல. இருபதாவது திருத்தம் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள கட்டுமட்டில்லா அதிகாரத்தில் கீழ் அவரினால் நியமிக்கப்பட்ட தத்துப்பிள்ளை, அது அவரின் விருப்பு வெறுப்புக்கேற்பவே ஆடும் என்பது எதிர்பார்க்கத் தக்கதே.

அந்தத் தேர்தல் ஆணையம் தன் கைவரிசையை ஏற்கனவே காட்டத்தொடங்கி விட்டது. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள் தொடர்பான சர்ச்சை நீதிமன்றத்தில் உள்ளது என்ற விட்டேத்தியான காரணத்தைக் காட்டி ஆறு கட்சிகளின் அங்கீகாரத்தை இடைநிறுத்தி வைத்திருக்கின்றது புதிய தேர்தல் ஆணையம். அதாவது அந்தக் கட்சிகளின் பெயரில் யாரும் தேர்தலில் போட்டியிட முடியாது.

இந்தத் துரும்பு இலங்கைத் தமிழரசு மீதும் பாய்வதற்கு நேரம் செல்லாது. உரிய தரப்பில் இருந்து கண் அசைவு வந்தால் எதுவும், எந்த வடிவத்திலும் நடக்கும்.

தமிழரசுக் கட்சியின் கடந்த பொதுக் கூட்டம் – தேசிய மாநாடு – நடைபெற்று இரண்டு ஆண்டுகளாகின்றன. கட்சியின் யாப்புப் படி ஒவ்வொரு வருடமும் அது நடக்க வேண்டும். தேர்தல் ஆணைக்குழு விதிமுறைகளின்படி குறைந்தபட்சம் ஒன்றரை ஆண்டுகளுக்கு ஒரு தடவை கட்சியின் வருடாந்த மாநாடு நடக்க வேண்டும். இரண்டையும் தாண்டி விட்டது தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிர்வாகத்தின் பதவிக் காலம்.

அடுத்தது – கட்சியின் பொதுச் செயலாளரை தெரிவு செய்யும் அதிகாரம் கட்சியின் பொதுக்குழுவுக்கே உண்டு. இருந்த பொதுச் செயலாளர் இராஜினாமாச் செய்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஒருவரைக் கட்சியின் பொதுச் சபையே கூடி நியமிக்க வேண்டும். இப்போது தற்காலிக ஏற்பாடாக ஒரு பதில் பொதுச் செயலாளரை மத்தியகுழு நியமித்திருப்பதாகக் காட்டி தேர்தல் ஆணையத்தைச் சமாளிக்கும் வேலையை மாவை – சுமந்திரக் கூட்டு முன்னெடுத்துள்ளது. ஆனால் இந்த ஒட்டு வேலை நின்று பிடிக்கக் கூடிய ஏற்பாடல்ல. இப்படியான தற்காலிக – பதில் – பொதுச் செயலாளரை வைத்துக் கொண்டு தேர்தல் வேட்பு மனு ஆவணங்களில் ஒப்பமிடுவது சட்டச் சிக்கலைக் கொண்டு வந்து,பாரதூரமான பின்னடைவுகளைக் கட்சிக்கும், அதன் பெயரில் இயங்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கும் ஏற்படுத்தி விடத் தாராளமாக வாய்ப்புகள் உண்டு.

கட்சியின் மாநாட்டை உரிய காலத்தில் கூட்டாதமையையும், பொதுச்செயலாளர் ஒருவரை உரிய முறையில் தேர்வு செய்யாதமையும் முன்னிறுத்தி யாரேனும் கட்சி உறுப்பினர் ஒருவர் (அதற்குத்தான் கட்சியில் தாராளமாக ஆள்கள் இருக்கின்றனர்) நீதிமன்றுக்குப் போனால் சிக்கல்தான்.

நீதிமன்றம் தடை உத்தரவு எதனையும் உடனடியாகக்கொடுக்காவிட்டால் கூட, வழக்கை விசாரணைக்கு அனுமதித்தால் அதை வைத்தே இங்கு 'பியூஸை' பிடுங்கி விடும் இப்போதைய தேர்தல் ஆணையம்.

புதிய நிர்வாகம், உள்கட்சித் தேர்தல் என்ற விடயங்களுக்கு முகம் கொடுக்க அஞ்சி மாநாட்டைக் கூட்டாமல் மாவை – சி.வீ.கே. – சுமந்திரன் – சத்தியலிங்கம் – அணி பார்த்திருக்குமானால் மாகாண சபைத் தேர்தல் வரும் சமயம் அண்ணாந்து பார்க்க நேரிடலாம். அப்படி நேர்ந்தால் புளொட்டின் அல்லது ரெலோவின் சின்னத்தில் களமிறங்க வேண்டிய விபரீதம் கூட்டமைப்புக்கு ஏற்படும்.

இன்றைய நீதித்துறை, தேர்தல் ஆணையம் போன்றவற்றைக் கவனத்தில் எடுத்து புத்திசாலித்தனமாக நடந்து கொள்வது தமிழரசுத் தலைவர்களைப் பொறுத்தது.

கட்சியையும், வீட்டுச் சின்னத்தையும் காபந்து பண்ண முடியாதவர் முதல்வராகி வடமாகாணத்தைக் காபந்து பண்ணுவாரா என்று மக்களைக் கேட்க வைப்பதற்கும் இடம் விடாமல் மாவை சேனாதிராசா நடந்து கொள்வார் என நம்புவோம்.

★ ★ ★

கொழும்புத் துறைமுக நகர ஆணைக் குழு சட்ட மூலத்தின் மீது இன்று உயர்நீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பமாகின்றது.

தமிழர் தரப்பின் மூத்த சட்டத்தரணிகள் இருவரும் களத்தில் குதிக்கின்றனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு ஆகியவற்றின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் வாதிடுகின்றார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் பிரஜாவுரிமை தொடர்பான அடிப்படை உரிமை மீறல் வழக்கை முன்னர் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த காமினி வியாங்கொட, முன்னாள் 'ராவய' இதழின் ஆசிரியர் ஜனரஞ்சன் ஆகியோரின் மனுக்களின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் களமிறங்குகின்றார்.

மொத்தம் பன்னிரண்டு மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதனால் விசாரணை இரண்டு, மூன்று நாள்கள் நீடிக்கக் கூடும்.

விசாரணை நடத்தும் ஐந்து நீதியரசர் கொண்ட உயர் நீதிமன்றம் தனது, தீர்ப்பை சபாநாயகருக்கும், ஜனாதிபதிக்கும் தனித் தனியாக அனுப்பி வைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

– மின்னல் –

## முரளிதரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாரடைப்பு ஏற்பட்டிருந்த நிலையில் அவர் சென்னை ஆயிரம் விளக்கு அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் இதயத்தில் அடைப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அடைப்பு நீக்க சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மருத்துவ கண்காணிப்பில் அவர் வைக்கப்பட்டிருக்கிறார் எனத் தமிழகத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## யாழ்.,கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 20 வயதுடைய இளைஞர்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் இணைந்து கடந்த நான்கு மாதங்களில் யாழ்ப்பாணம், மானிப்பாய், காங்கேசன்துறை, சாவகச்சேரி மற்றும் பூநகரி பொலிஸ் பிரிவுகளில் உள்ள 9 பாடசாலைகளை இரவு வேளைகளில் உடைத்து பெறுமதியான இலத்திரனியல் கற்றல் உபகரணங்களைத் திருடியுள்ளனர். திருடிய பொருள்களில் ஒரு பகுதியை விற்பனை செய்தும் உள்ளனர்.

செம்மணியில் வைத்து சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம், மாவிட்டபுரம் வீமன்காமம் மகா வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம், கட்டுடை சைவ வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், கீரிமலை வலித்தூண்டல் றோ.க.த.க. பாடசாலை மற்றும் பூநகரி மத்திய கல்லூரி ஆகியவற்றிலேயே சந்தேகநபர்களால் பொருள்கள் திருட்டப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளில் இரண்டில் இரு தடவைகள் திருட்டுப் போயுள்ளன.

ஒளி எறிவு படக் காட்டமைவுகள், கணினிகள், அதிதிறன் பலகைகள், மடிக் கணினிகள் உள்ளிட்ட 40 'இலட்சம்' பெறுமதியான பொருள்கள் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் திருட்டுக்குப் பயன்படுத்தியதாக முழங்காவிலைச் சேர்ந்தவரிடமிருந்து பட்டா படி வாகனம் ஒன்றும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரிடமிருந்து ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாடசாலை உபகரணங்களை அடையாளம் காண்பிக்க அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் உஜித் எம்.பி. லியனகேயின் கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் ஆர்.பிரதீப் தலைமையிலான அணியினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி பல்கலைக்கழக நிர்வாகத்தால் கடந்த ஜனவரி 8ஆம் திகதி இடித்தழிக்கப்பட்டது.

இதையடுத்து, அதனைக் கண்டித்து மாணவர்கள் போராட்டங்களை முன்னெடுத்மையுடன், மக்களின் எழுச்சி மற்றும் சர்வதேச ரீதியிலான கண்டனங்களைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைக்க பல்கலைக்கழக நிர்வாகம் இணங்கியது.

அத்துடன், பல்கலைக்கழக துணைவேந்தரினால் அடிக்கல் நாட்டப்பட்டமையுடன் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் எனக் குறிப்பிடப்பட்ட பதாகை காட்சிப்படுத்தப்பட்டு நினைவுத் தூபியை மீள அமைக்கும் பணிகள் மாணவர்களின் பங்களிப்புடன் கடந்த ஜனவரி 15ஆம் திகதி ஆரம்பமாயின.

இந்நிலையில், அதன் கட்டுமானப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ள நிலையில், எதிர்வரும் 23ஆம் திகதி அதனைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## வடக்கு உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குருநாகல் மாவட்டத்தில் தித்தவேல்கல கிராமத்தில் 29 கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்டமையை அடுத்து அந்தக் கிரா மம் நேற்று முதல் முற்றாக முடக்கப்பட்டது என அப்பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

இந்தக் கிராமத்தில் சுமார் 540 குடும்பங்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர் மேலும் கூறியுள்ளார்.

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு மரணமடைந்துள்ளார். இவரது மரணம் நேற்றுமுன்தினம் நிகழ்ந்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 618 ஆக அதிகரித்துள்ளது.

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் தொற்றுடம் அடையாளம் காணப்பட்டார். அவர் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்.

திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டியுள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையில் 11 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

மன்னார் மாவட்டத்திலும் ஒருவருக்குக் கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது. அவர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர் – என்றார்.

## அன்னை பூபதியை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார். மேலும் –

'நாவலடியில் உள்ள எங்களது அன்னையின் சமாதியில் நாங்கள் கடந்த மூன்று வருடத்திற்கு மேலாக நினைவேந்தல் அனுஷ்டித்து வருகின்றோம். ஆனால் இன்று எங்களது குடும்பத்தை அங்கு சென்று நினைவேந்தல் அனுஷ்டிக்க வேண்டாம் எனவும் மீறி அனுஷ்டித்தால் கைது செய்யப்படுவீர்கள் என காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நாங்கள் எங்களது தாயின் இறப்பினை அவரை புதைத்துள்ள இடத்தில் அனுஷ்டிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதானது மிகவும் கவலைக்குரியது. இது அரசியல் சார்ந்த செயற்பாடு அல்ல. அன்னை பூபதி எனது தாயார். எனது தாயாரின் இறப்பினை நாங்கள் நினைவு கூருகின்றோம். அதில் எந்தவித பயங்கரவாதச் செயற்பாடும் இல்லை.

எனது தாயார் அன்னையர் முன்னணி என்ற அமைப்பின் ஊடாக இந்திய இராணுவத்திற்கு எதிராகவே போராடி உயிர் துறந்தார். அவர் ஆயுதம் ஏந்தி எந்த போராட்டத்தினையும் நடத்தவில்லை. இந்த நாட்டிலிருந்து இந்திய படையினரை வெளியேற்றவே போராட்டினார். அதுவும் அஹிம்சை வழியில், காந்தீய வழியில் போராடினார். அவ்வாறானவரை யாரும் பயங்கரவாதியாகச் சித்திரிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்து எமது தாயாரை நினைவு கூ ரவில்லை. நாங்களும் எங்கள் குடும்பமுமே அவரை நினைவு கூருகிறோம். இவ்வாறான நிலையில் எங்களைக் குறித்த நினைவினை செய்ய வேண்டாம் என தெரிவிப்பது கவலைக்குரியது.

இன்று உலகம் எங்கும் எங்கள் தாயாருக்கு நினைவு தினம் நடத்தப்பட்டுவரும் நிலையில் அவரது சமாதியில் எங்களுக்கு நினைவு தினம் நடாத்தமுடியாமல் இருப்பது வேதனையளிக்கின்றது. – எனத் தெரிவித்தார்.

## இலங்கையில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 96 ஆயிரத்து 796 ஆக அதிகரித்துள்ளது எனவும் இராணுவத் தளபதி கூறினார்.

நாட்டு மக்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து எச்சரிக்கையுடன் நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஏப். 27 இல் நாடு வருகிறார்

இரு நாள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை வருகின்றார்.

இரு தரப்பு இராஜதந்திர நிரலுக்கமைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாதுகாப்புப் துறைசார் முக்கியஸ்தர்களையும் சந்தித்து சீன பாதுகாப்பு அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் துறைமுக நகர் உட்பட முக்கிய சீனப் திட்டங்களையும் ஜெனரல் வெய் ஃபெங் பார்வையிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருதரப்பு வர்த்தகம், முதலீடு, நிதியுதவி மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு போன்றவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் போன்று இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகளை அடுத்த கட்டத்துக்கு விரிவுபடுத்துவது சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங்கின் இலங்கை விஜயத்தின் முக்கிய நோக்கமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இலங்கை விஜயத்துக்கு முன்பதாக கடந்த மார்ச் மாதம் ஐரோப்பாவிற்கு விஜயம் செய்திருந்த ஜெனரல் வெய் ஃபெங் அங்கு இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்பு விரிவாக்கம் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார்.

தென் சீனக்கட்லில் ஏற்பட்ட பதற்ற நிலையின் போது குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகள் தென் சீனப் கடலுக்கு தமது கடற்படைகளை அனுப்பியும் சீன எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஐரோப்பா விஜயத்தின் போது அந்த நாடுகளுடன் இராணுவ ஒத்துழைப்புகள் தொடர்பில் ஜெனரல் வெய் ஃபெங் கவனம் செலுத்தியிருந்தார்.

குறிப்பாக ஹங்கேரி, செர்பியா, கிரீஸ் மற்றும் வட மாசிடோனியா ஆகிய நாடுகளின் தலைவர்களுடனான ஜெனரல் வெய் ஃபெங்கின் சந்திப்புகளின் போது இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்பு விரிவாக்கத்தின் அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வது தொடர்பில் மிக ஆர்வமாகப் பேசப்பட்டுள்ளது.

மறுபுறம் தென் சீனக் கடலுக்குள் தமது கடற்படைகளை அனுப்பிய நாடுகள் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு என்று அழைக்கப்படுகின்ற நேட்டோ படைகளையும் குறித்த கடற்பகுதிக்கு அனுப்புவது தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தது. தென் சீனப் கடலில் இவ்வாறானதொரு பாரிய எதிர்ப்பை எதிர்பாராத சீனா பின்வாங்கியது.

ஆனால் தென் சீன கடலில் தமது திட்டங்களை முன்னெடுக்கும் போது இவ்வாறானதொரு எதிர்ப்பலை மீண்டும் வந்து விடல் கூடாது என்பதில் எச்சரிக்கையுடன் செயற்படும் வகையிலேயே சீனப் பாதுகாப்பு அமைச்சரின் ஐரோப்பிய விஜயம் அமைந்திருந்தது.

ஜெனரல் வெய் ஃபெங்கின் கொழும்பு விஜயமும் இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவதுடன் பிராந்தியத்தில் ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையிலான மூலோபாயத்தை வகுப்பதாகவே அமையும் என பாதுகாப்பு துறைசார் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பாக இந்திய மற்றும் பசுபிக் பெருங் கடல்களை சீனாவின் மேலாதிக்கத்தின் கீழ் வராமல் பாதுகாக்கும் வகையில் அமெரிக்கா தலைமையிலான அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவை உள்ளடக்கிய 'குவாட்' உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கடற் பிராந்தியத்தில் சீனாவின் தந்திரோபாயம் வெற்றிபெற்று விடக் கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகவே குவாட் காணப்படுகிறது.

குவாட் காரணமாக இந்து சமுத்திரம் மெதுவாக இராணுவமயமாக்கலுக்கு உட்படுவதோடு இங்கு ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொள்ள இலங்கை மற்றும் நேபாளம் உள்ளிட்ட நாடுகளுடன் இராணுவ உறவுகளை சீனா வளர்த்துக்கொள்கிறது.

பாகிஸ்தானுடனும் மிக பலமான இராணுவ உறவைசீனா கொண்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை வரும் ஜெனரல் வெய் ஃபெங்க் இலங்கையின் முன்னெடுக்கவுள்ள பேச்சுகள் முக்கியம் பெறுகின்றன.

# நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பு வந்தால் அதற்கு எதிராக சுதந்திரக் கட்சி போராடும்

## ரோஹண லக்ஷ்மன் பியதாஸ திடசங்கற்பம்



நாட்டின் அபிவிருத்திக்காக முதலீடுகளை ஊக்குவிக்கும் அதேவேளை, சுதந்திரம், இறையாண்மை, சுயாதீனத்தன்மை என்பவற்றையும் பாதுகாக்க வேண்டும்.

இவற்றுக்கு ஏதேனுமொரு வகையில் அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதற்கு எதிராக சுதந்திரக் கட்சி போராடும் என்று பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர சர்ச்சை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை ஜனநாயகம் மிக்கதொரு நாடாகும். எனவே ஜனநாயகத்துக்கு ஏதேனுமொரு வகையில் அச்சுறுத்தல் ஏற்படுமாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு எதிராகப் போராடும்.

தற்போது புதிதாக கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது. அது தொடர்பிலும் சுதந்திரக் கட்சி அவதானம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய சட்ட வல்லுநர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் உள்ளிட்ட தரப்பினரின் நிலைப்பாடுகளை அறிந்து அவற்றுக்கேற்ப சுதந்திரக் கட்சி செயற்படும்.

இலங்கை இறையாண்மையும் சுயாதீனத்தன்மையும் மிக்க நாடாகும். அதனைப் பாதுகாக்க வேண்டும். எனவே முதலீடுகளை ஊக்குவிக்கும் அதே வேளை இவற்றையும் பாதுகாக்க வேண்டும். அதற்கு சுதந்திரக் கட்சி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். – என்றார்.

# இந்தியாவில் உருமாறிய கொரோனா இலங்கைக்கும் அதனால் ஆபத்தா?

இந்தியாவில் புதிய உருமாறிய கொரோனா வைரஸ் உருவாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த வைரஸ் வெளிநாடுகளுக்கும் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தின் கொரோனாத் தொழில்நுட்ப பிரிவின் தலைவர் மரியா வன் கோர்கோவ் கூறியவை வருமாறு:–

'இந்தியாவில் கடந்த டிசெம்பர் மாதம் 2 மாநிலங்களில் பி.1.617 என்ற புதிய உருமாறிய கொரோனா முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

இது, பி1617 வம்சத்தைச் சேர்ந்தது. இந்த வைரஸ், ஈ484கியு, எல்452ஆர் என்ற 2 மரபணு உருமாறிய கொரோனா ரகங்களாக மாற்றம் அடைந்தது.

இந்த வகையான கொரோனா, இந்தியாவில் அதிகரித்து வருகிறது. அத்துடன், பிற நாடுகளிலும் முழுவதும் பரவி வருகிறது.

இதனால் இந்தியாவுக்கு அருகில் உள்ள இலங்கை போன்ற நாடுகளுக்கும் பரவும் ஆபத்தை கொண்டுள்ளது.

குறிப்பாக, ஆசியாவிலும், வட அமெரிக்காவிலும் கண்டறியப்பட்டது. இந்த கொரோனா, வேகமாக பரவக் கூடியது. இதனால், தடுப்பூசி உள்ளிட்ட கொரோனாச் தடுப்பு நடவடிக்கைகளில் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது' – என அவர் கூறினார்.

# துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் கைது

நாட்டின் பல பிரதேசங்களிலும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புக்களில் துப்பாக்கிகளுடன் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

களுத்துறை குற்ற விசாரணைப் பிரிவினரால் அளுத்கம பொலிஸ் பிரிவில், தர்கா நகர் – பொந்துபிட்டி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 38 ரக ரிவோல்வர் மற்றும் 6 துப்பாக்கி ரவைகளுடன் 37 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபருக்கு எதிராக களுத்துறை மற்றும் மத்துகம நீதிமன்றங்களில் மனித கொலையுடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு குறித்த சந்தேகநபர் அந்த வழக்குகளில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவர் என்பதும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை அநுராதபுரம் குற்ற விசாரணைப் பிரிவினரால் திறப்பனை பிரதேசத்தில் 40 வயதுடைய சந்தேகநபரொருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேபோன்று விசேட அதிரடிப் படையினரால் கேகாலை இம்புல்கஸ்தெனிய பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 28 வயதுடைய சந்தேகநபரொருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார்.

# கொழும்பு மற்றும் அநுராதபுரம் பகுதிகளில் ஹெரோயின் வைத்திருந்த மூவர் கைது

கொழும்பு, ஏப். 19

கொழும்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த சனிக்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு கரையோர பொலிஸ் பிரிவில் புதுச்செட்டி வீதி பிரதேசத்தில் 703 கிராம் ஹெரோயினுடன் கொழும்பு 13 ஐ சேர்ந்த 26 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயினும் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதே போன்று அநுராதபுரம் பொலிஸாரால் 6 கிராம் ஹெரோயினுடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை பொலிஸாரால் போதைப் பொருளுக்கு எதிரான சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். – என்றார்.

# திருமலை கடற்கரைச்சேனையில் யானை தாக்கி விவசாயி படுகாயம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரைச்சேனை பகுதியில் காட்டு யானையின் தாக்குதலினால் வயோதிபரொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் சனியிரவு (17 ஆம் திகதி) இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு உள்ளானவர் மூதூர் கடற்கரைச்சேனை பகுதியைச் சேர்ந்த கே. சந்திரகுமார் (55 வயது) எனவும் தெரியவருகின்றது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது: –

கடற்கரைச் சேனை – சம்புக்கலி பகுதியில் உள்ள அவரது வயலுக்கு சென்ற போது யானை அவரைத் தாக்கியதாகவும் இதனையடுத்து சம்பூர் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை யானையின் தாக்குதலுக்கு உள்ளான நபரை அம்புலன்ஸ் மூலம் ஏற்றிச் சென்ற வேளை கட்டாக்காலி மாடுகள் வீதியில் உறங்கிக் கொண்டிருந்தமையினால் அம்புலன்ஸ் சாரதியும், ஊழியரும் சிரமங்களை எதிர் நோக்கினர் எனவும் தெரியவருகின்றது.

மாடுகள் வீதிகளில் நிற்பதனால் வீதி விபத்துக்கள் மற்றும் அவசரமாக நோயாளர்களை ஏற்றிச் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், மூதூர் பிரதேச சபை மாடுகளை வீதிகளில் விடும் மாட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## நாடு எப்போதோ சீனக் கொலனி

'ஊசி போகும் இடம் பார்ப்பார்; உலக்கை போகும் இடம் பாரார்' என்ற பேச்சு மொழி நம்மத்தியில் உண்டு.

அற்ப விடயங்களில் கவனம் செலுத்துவோர், முக்கிய – பிரதான – விடயங்களைக் கவனம் செலுத்தாமல் கோட்டை விட்டு விடுகின்றமையை இப்படிக் கூறுவர்.

கொழும்புத் துறைமுகம் நகர் விடயத்தில் தென்னிலங்கை பௌத்த, சிங்களம் இப்போது சீறுவத்தைப் பார்க்கும் போது இந்தப் பேச்சு மொழியைத்தான் சுட்டத் தோன்றுகின்றது.

கொழும்புத் துறைமுக நகரத்தைக் கையாளும் அதிகாரம் கொண்ட ஆணைக்குழுவை நிறுவுவது தொடர்பான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமையை அடுத்து, தென்னிலங்கை பௌத்த – சிங்களத் தரப்புகள் சீறத் தொடங்கியிருக்கின்றன.

இது காலம் பிந்திய ஞானம். குதிரை ஓடிய பின்னர் லயத்தை மூடும் வேலை. தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கும் எத்தனம்.

தலைநகர் கொழும்பின் துறைகமுகத்தை ஒட்டி கடலில் – பெரும் பொருள், நிதிச் செலவில் – மண் நிரப்பி ஆயிரத்து 115 ஏக்கர் விஸ்தீரண நகரைக் கட்டி எழுப்பும் திட்டத்தில் சீனாவைக் கொண்டு வந்து ராஜபக்ஷ அரசு இறக்கியபோதே அம்முயற்சி மோசமாக விமர்சிக்கப்பட்டது. நாட்டின் இறைமையை அடமானம் வைக்கும் சின்னத்தனமான வேலை என்று பல தரப்பினரும் கூப்பாடு போட்டனர். ஆனால் யோகர் சுவாமிகள் கூற்றுப் போல அப்போதே அது முடிந்த காரியம்.

சோழியன் குடுமி சும்மா ஆடாது. இவ்வளவு பெரும் தொகை நிதியைக் கடலில் கொட்டி, மண் நிரப்பி, நிலமாக்கும் முயற்சி எடுக்கப்பட்ட போதே தலைநகரை ஒட்டி ஒரு பிரதேசத்தை தன் முழு ஆக்கிரமிப்புக்குள் – ஆதிக்கத்துக்குள் – கொண்டு வருவதற்கு சீனா விரிக்கும் வலை இதுவெனக் கூறப்பட்டது. அப்போதெல்லாம் பார்த்திருந்து விட்டு இப்போது துறைமுக நகருக்கான பரந்த பிரதேசம் உருவாக்கப்பட்டு அதற்கான சட்ட ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் போது, 'நிலத்தில் அணில் ஓடும் போது பார்த்து வாளாவிருந்து விட்டு, அது மரத்தில் ஏறிய பின்னர் கீழே இருந்து குலைக்கும் நாய் மாதிரி' இப்போது சத்தமிடுகின்றது தென்னிலங்கை 'தேசபக்தி' கும்பல்.

வண. முருந்தெட்டுவே ஆனந்த தேரர், எல்லே குணவங்ஸ தேரர், ஓமல்பே சோபித தேரர், விஜேதாஸ ராஜபக்ஷ எல்லோரும் கும்பகர்ணத் தூக்கத்துக்குப் பின்னர் எழுந்து வந்தவர்கள் போல – இதுவரை நடந்ததை ஏதும் தெரியாதவர்கள் மாதிரி – இப்போது துள்ளிக் குதிக்கின்றனர்.

புதிதாகக் கடலில் மண் நிரப்பி சுவீகரிக்கப்படும் நிலத்தில், இலங்கையின் சில சட்ட ஏற்பாடுகள் செல்லா, பிரத்தியேக அதிகாரங்களுடன் சீன நிர்வாகம் அங்கிருக்கும் என்ற ஏற்பாடுகள் குறித்து, இப்படி ஒரு திட்டம் உருவாக்கப்பட்ட போதே வெளிப்படையாகப் பேசப்பட்டது.

நாட்டில் பெரும் தொகை காடுகளும், தரைப் பகுதிகளும் பயன்படுத்தப்படாமல் இருக்கையில், கடலில் மண் கொட்டி நிரப்பி நிலமாக்கும் 'தலை சிறந்த திட்டம்' ஆரம்பிக்கப்பட்ட போதே இந்தப் புத்திசாலித்தனமான நடவடிக்கை குறித்தெல்லாம் விவரிவாகக் கேள்வி எழுப்பப்பட்டது.

புதிய கொழும்புத்துறைமுக நகரை சீனக் கொலனியாக மாற்றும் வேலை இது என்று இப்போது சீறுகின்றார் ஓமல்லே சோபித தேரர்.

அவரின் கருத்தைப் பார்த்து சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

ஏதோ இப்போது கொழும்புத் துறைமுக நகரின் அதிகார விடயத்தில் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச சட்ட மூலத்தை நிறைவேற்றி, சட்ட அதிகாரத்தை சீனத் தரப்புக்கு வழங்கினால்தான் – இனி மேல்தான் – இந்த நாட்டில் சீனக் கொலனி உருவாகும் என்ற மாதிரி அவர் பேசுவது மிகப்பெரிய நகைச்சுவை.

ஏற்கனவே வாங்கு, வாங்கென்று சீனாவிடம் கடன் வாங்கி, இந்த நாட்டை சீனாவுக்கு அடிமையாக்கி, தாரைவார்த்து முழு நாட்டையுமே சீனக் கொலனியாக்கி விட்டனர் ராஜபக்ஷக்கள். அது தெரியாமல் இனிமேல்தான் நாடு சீனக் கொலனியாகப் போகின்றது என்று புலம்புகின்றார் அவர்.

ஹம்பாந்தோட்டையிலும் பிற இடங்களிலும் சீனத் தொழிலாளர்கள் என்ற பெயரில் அந்த நாட்டில் இருந்து கொண்டு வந்து இறக்கிய உழைப்பாளர் அணியில் கணிசமானோர் அந்நாட்டு சிறைக் கைதிகள் எனற பேச்சுக்கள் உள்ளன.

முன்னைய அரசுகள் சீனாவுக்கும், சீனர்களுக்கும் அளவுக்கு மீறி வெற்றிலை வைத்து அழைத்து, இங்கு நிலை கொள்ள வைத்து, தமது சந்ததிகளையே அவர்கள் நிலைபெறச் செய்ய ஏற்பாடுகளைக் கூட்டிக் கொடுத்து விட்டு – நாட்டையே கெடுத்துக் குட்டிச் சுவராக்கச் செய்து விட்டு – இனிமேல்தான் நாடு சீனக் கொலனியாவது போல கூப்பாடு போடுவது, நல்ல நடிப்பப்பா…!

## ஈழத்தமிழர்களின் விவசாய நிலங்களை அரசு பறிக்கின்றது என்கிறார் வைகோ



ஈழத்தமிழர்கள் எத்தனையோ நூற்றாண்டுகளாக, தலைமுறை தலைமுறைகளாக விவசாயம் செய்து வந்த நிலங்களை இலங்கை அரசாங்கம் பறிக்கிறது என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

உலக நாடுகளை ஏமாற்ற ஏற்கனவே பறித்த நிலங்களைத் திரும்ப வழங்குவதாகப் போக்குக் காட்டிக்கொண்டே, மறுபுறம் புதிய நிலங்களைப் பறிக்கின்றது.

அண்மையில் மட்டக்களப்பு தமிழ் விவசாயிகளின் நிலங்களில் இலங்கை வனத் துறையினர் திடீரென எல்லைக் கற்களை நட்டு, இவை எல்லாம் வனப்பகுதிகள் என அறிவிப்பு செய்து இருக்கின்றனர்.

இந்த இடங்களை விட்டுத் தமிழர்கள் வெளியேற வேண்டும் என அச்சுறுத்துகிறார்கள்.

எத்தனையோ நூற்றாண்டுகளாக, தலைமுறை தலைமுறைகளாகத் தமிழர்கள் விவசாயம் செய்து வந்த நிலங்களைப் பறிக்கின்றார்கள்.

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு நெருக்கமான சிங்கள நிறுவனங்கள், பெரிய கருவிகளைக் கொண்டு வந்து மணல் அள்ளுகின்றார்கள். அதனால், அருகில் உள்ள தமிழர்களின் விளைநிலங்களில் பயிர்கள் அழிவதைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை. தமிழர்களின் எதிர்ப்புகளைக் கண்டு கொள்வதும் இல்லை.

தமிழர்களின் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களில் சிங்களக் குடும்பங்களைக் கொண்டு வந்து குடி அமர்த்தி இருக்கின்றார்கள்.

இதை எதிர்த்து, மயிலத்தமடு பகுதி வாழ் தமிழ் விவசாயிகள், பல மாதங்களாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள்.

வனங்கள் பாதுகாப்பு என்ற பெயரில் தமிழர்களின் நிலங்களைப் பறிப்பது மட்டும் அல்லாமல் கடந்த ஆண்டு, தொல்லியல் துறையின் சார்பில் பௌத்த சமயத் தடங்கள் தொடர்பான ஆய்வு என்ற பெயரில், தமிழர்களின் நிலங்களைப் பறிக்கின்ற முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

இந்த விடயத்துக்கு கடுமையான கண்டனங்கள் எழுந்தன. இலங்கை நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. ஆனால், தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

தொல்லியல் துறை ஆய்வு என்ற பெயரில் கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் துறை ஆய்வுகளை மேற்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு குழு அமைத்தார்.

அந்தக் குழுவில் சிங்களவர்களும் பௌத்த மதகுருக்களும் மட்டுமே இடம்பெற்று இருக்கின்றார்கள்.


அவர்கள் மட்டக்களப்பு குசலனமலை குமரன் கோவில், முன்பு பௌத்தர்களின் வழிபாட்டு இடம் என நிறுவுகின்ற முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றார்கள்.

இதுபோன்ற முயற்சிகளால் தமிழர்களின் நிலங்களை இலங்கை அரசு பறிப்பதை இந்திய அரசும் உலக நாடுகளும் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏற்கனவே பறித்துக்கொண்ட நிலங்களில் இருந்து சிங்களக் குடியேற்றங்களையும் சிங்களப் படை முகாம்களையும் அகற்ற வேண்டும் என வலியுறுத்த வேண்டும். - என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஜனாதிபதியினால் மிரட்டப்பட்ட முதல் நபர் அல்லர் விஜேதாஸ!

### ஜே.வி.பி. தலைவர் கூறுகின்றார்



கொழும்பு, ஏப். 19

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் விஜயதாஸ ராஜபக்ஷ மட்டும் அச்சுறுத்தப்படவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரையே ஜனாதிபதி அச்சுறுத்தும் போது சாதாரண பொதுமக்களின் நிலை என்ன என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

எனவே மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்களால் நாட்டை ஆட்சி செய்ய ஜனாதிபதியும் அரசாங்கமும் மேற்கொண்ட முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து தொடர்பாக தனது கருத்தை தெரிவிக்க ஜனாதிபதிக்கு உரிமை உண்டு. ஆனால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சாதாரண மக்களின் கருத்திற்கு பதிலளிக்க பல்வேறு வழிகள் உள்ளன.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அல்லது அரசாங்க தகவல் திணைக்களம் ஊடாக அந்த அறிக்கைக்கு பதிலளித்திருக்க முடியும். மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்களால் நாட்டை ஆட்சி செய்ய ஜனாதிபதியும் அரசாங்கமும் மேற்கொண்ட முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என கூறினார்.

நாடு குறித்து முடிவுகளை எடுக்கும்போது மக்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் எனவே தான் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளதாகவும் அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

நீண்ட நீதிமன்ற விடுமுறை காலத்தில் நாடாளுமன்றில் வரைவைச் சமர்ப்பித்துக் குறித்த சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான உரிமையைக் கூட அரசாங்கம் பறித்திருக்கிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

## கொவிஷீல்ட் தடுப்பூசியின் பக்க விளைவு இலங்கையில் சிலர் பலியாகினர் எனத் தகவல்

ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் பக்க விளைவாக இலங்கையில் சில மரணங்கள் சம்பவித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை மருத்துவ ஆய்வு கூட ஆய்வாளர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொவிட் தடுப்பூசி செலுத்தப்படுவது சம்பந்தமாக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கூறுகையில் -

இதன் காரணமாக உலகில் பல நாடுகள் இந்த தடுப்பூசியை பயன்படுத்துவதை நிறுத்தியுள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில் இது தொடர்பில் இலங்கையும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் கூறுபோடும் தேவை அரசுக்குக் கிடையாது
# நீதிமன்றத் தீர்ப்பு எதுவாயினும் அதனை நாம் ஏற்போம்

## அரசாங்கம் திட்டவட்டம்



நாட்டை கூறுபோட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. துறைமுக நகர ஆணைக்குழு சட்ட மூலம் தொடர்பில் நீதிமன்றம் எடுக்கும் தீர்மானம் எதுவாயினும் அதனை முழுமையாக ஏற்போம் என அமைச்சரவை பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ குறிப்பிடும் கருத்துக்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

இவரது அரசியல் நிலை தொடர்பில் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இவருக்கு எதிராக கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிபபிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொழும்பு துறைமுக நகர செயற்திட்டம் என்பது 2014 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட கால அரச தலைவர்கள் அனைவரதும் கனவாகக் காணப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2014 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுக நகர செயற்திட்ட சவாலைப் பொறுப்பேற்றார்.

2015 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து துறைமுக நகர அபிவிருத்திப் பணிகள் அரசியல் நோக்கங்களுக்காக இடை நிறுத்தப்பட்டன.

நல்லாட்சி அரசாங்கம் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி பணிகளை மீண்டும் முன்னெடுக்க வேண்டிய தேவை காணப்பட்டது.

2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதன் பணிகள் ஒப்பீட்டளவில் நிறைவு பெற்றன.

இலங்கையின் மொத்த பரப்பளவைக் காட்டிலும் ஒரு பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தும் வகையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி விசேட வர்த்தமானியை வெளியிட்டார்.

கொழும்பு துறைமுக நகரத்தில் மொத்த நிலப்பரப்பளவின் உரித்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கினார்.

அதற்கான ஆவணங்களிலும் அவர் கைச்சாத்திட்டுள்ளார். ஆகவே கொழும்பு துறைமுக நகரம் இலங்கைக்கு சொந்தமில்லை என்று குறிப்பிடும் கருத்து இந்த ஆவணங்கள் ஊடாக பொய்யாக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தின் ஊடாக வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது எதிர் கொள்ளும் நெருக்கடி நிலை இனங்காணப்பட்டு அவற்றுக்கான தீர்வைக் கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழு ஊடாகப் பெற்றுக்கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ முன்வைத்துள்ள கருத்துக்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை.

நாட்டைக் கூறுபோட வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. அரசமைப்பிற்கு முரணான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

நாட்டின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் தடையாகச் செயற்படுபவர்கள் அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படவில்லை.

அவர்கள் நாட்டுக்கு துரோக மிழைக்கிறார்கள். வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதற்கான வழிமுறைகள் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷவின் செயற்பாடுகள் கவலைக்குரியன. இவரது அரசியல் தன்மை தொடர்பில் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இவருக்கு எதிராக கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பது அவசியமாகும். இந்த விடயம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்தை சவாலுக்குட்படுத்தி பல்வேறு தரப்பினர் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்கள்.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் நீதிமன்றம் எடுக்கும் தீர்மானத்தை முழுமையாக செயற்படுத்துவோம். அரசமைப்பிற்கும், நீதித்துறையின் கட்டமைப்புக்கும் முரணாக அரசாங்கம் ஒருபோம் செயற்படாது என்பதை பொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன். – என்றார்.

# முன்வினையின் பயனையே தற்போது அனுபவிக்கின்றார் விஜேதாஸ எம்.பி.

## எதிர்க்கட்சி சாடல்



நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜக்ஷவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அச்சுறுத்தினார் எனக் குறிப்பிடப்படும் விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவை கிடையாது.

முன்வினையின் பயனையே நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தற்போது அனுபவிக்கிறார்.

இவர் நல்லாட்சி அரசாங்கத்தில் நீதியமைச்சர் பதவி வகித்துக்கொண்டு ராஜபக்ஷர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டமையை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்ட மூலம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்தை அரசாங்கம் கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பித்தது.

இந்தச் சட்ட மூலத்துக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்காத வகையில் பொது விடுமுறை காலத்தில் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் குறுகிய நோக்கம் வெற்றிபெறவில்லை. இந்தச் சட்ட மூலத்துக்கு எதிராக பல மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்ட மூலம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்ட கருத்தால் ஜனாதிபதி அச்சுறுத்தினார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தைப் பெரிதுபடுத்துவது அவசியமற்றது. முன்வினையின் பயனை விஜேதாஸ ராஜபக்ஷ தற்போது அனுபவிக்கிறார்.

திருடர்களுக்குத் தண்டனை வழங்குவதாகக் குறிப்பிட்டு நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்தது. இந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை.

அதற்கு இவ்வாறானவர்களும் ஒரு காரணியாகும். நீதியமைச்சர் பதவி வகித்துக்கொண்டு ஒரு தரப்பினருக்குச் சார்பாகச் செயற்பட்டமை தொடர்பில் இவரே பல முறை பகிரங்கமாக ஊடகங்கள் மத்தியில் குறிப்பிட்டுள்ளார். இவரது அரசியல் செயற்பாட்டை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

தமிழர்கள் நாட்டைப் பிளவுப்படுத்த முயற்சிக்கிறார்கள் அதற்கு இடமளிக்கக் கூடாது என்று போலியான குற்றச்சாட்டை முன்வைத்து அரசாங்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது.

69 லட்ச மக்களும் பொய்யான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். இனியாவது பெரும்பான்மை மக்கள் உண்மை தன்மையைப் புரிந்துக்கொள்ள வேண்டும்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்ட மூலம் தொடர்பில் நீதிமன்றம் எவ்வாறான தீர்வை வழங்கும் என்பதை குறிப்பிட முடியாது.

நாட்டு மக்கள் அனைவரும் நீதித்துறையையே இறுதியாக நம்பியுள்ளார்கள். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். – என்றார்.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 1,834 பேர் கைது

மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக ஏப்ரல் 13 முதல் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணிவரையான காலப் பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையில் 1,834 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைதுசெய்வதற்கான சிறப்பு நடவடிக்கை நேற்று நண்பகல் முதல் இன்று காலை 6 மணிவரை செயல்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை, நெடுஞ்சாலைகளின் நுழைவாயில்கள் மற்றும் வெளியேறும் இடங்களில் செயல்படுத்தப்படும்.

இதேவேளை பண்டிகைக் காலத்தில் மது போதையுடன் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கும் விசேட தேடுதல் நடவடிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். மது போதையில் வாகனத்தை செலுத்துவோருக்கு பிணை வழங்கப்பட மாட்டாது. இவர்கள் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

# இன்று திறக்கப்படுகின்றது சப்ரகமுவ பல்கலைக்கழகம்

கொழும்பு, ஏப். 19

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்ட மேற்கு மாகாணத்திலுள்ள தஹம் பாடசாலைகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இலங்கை முழுவதும் உள்ள அனைத்து தஹம் பாடசாலைகளிலும், இனி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் என புத்த விவகார ஆணையகத்தின் ஆணையாளர் ஜெனரல் சுனந்த காரியபெரும கூறியுள்ளார்.

இதற்கிடையில், சப்ரகமுவ பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை இன்று (திங்கட்கிழமை) ஆரம்பிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி தொழில்நுட்ப பீடத்தின் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளே முதலில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து நிறுவனங்களின் கல்வி நடவடிக்கைகளும் சுகாதார வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசாங்கம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணெய் ஏனைய கொள்கலன்கள் இந்த வாரத்தில் மீள் ஏற்றுமதி

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய தரமற்ற தேங்காய் எண்ணெய் அடங்கிய கொள்கலன்கள் இந்த வாரத்தில் மீள் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன என சுங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த சில நிறுவனங்களின் தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய அஃப்ளாடொக்சின் இரசாயனம் அடங்கியுள்ளதாக அண்மையில் உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து, 105 மெற்றிக் தொன் அளவிலான தேங்காய் எண்ணெய் அண்மையில் மலேசியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, ஏனைய இரண்டு நிறுவனங்களின் தரமற்ற தேங்காய் எண்ணெய் கொள்கலன்களும் தொடர்ந்தும் சுங்கப்பிரிவின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அவற்றையும் இந்த வாரத்தில் மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் –
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை

16

## Online Classroom



ஆசிரியர்கள் பலரின் வேண்டுகோளுக்கமைவாக சூம் செயலி ஒன்றைப் பதிவிறக்கம் செய்து கணனியில் நிறுவுதல் மற்றும் அதில் காணப்படும் வசதிகள் பற்றிய அடிப்படை விடயங்களை சென்ற தொடரிலிருந்து பார்க்கிறோம். சூம் செயலியை இலங்கையில் அதிகளவானவர்கள் பயன்படுத்தினாலும் அதன் பாவனை சவால் மிக்கதாக இருப்பதை அவதானிக்கலாம். பலர் அதனை அணுகுவதற்கு தயங்குவதும், அதனைச் இயக்குவதில் சிக்கல்களை எதிர்நோக்குவதைத் தவிர்ப்பதற்காகவும் அதனை இங்கே விரிவாக வெளிப்படுத்த முயல்கிறோம்.

சூம் செயலி ஒரு வீடியோ கான்பரன்சிங் சேவையாகும் – வீடியோ அல்லது ஒலி மட்டும் அல்லது இரண்டின் மூலமாகவும், தனிநபர் அல்லது குழு நேரடித் தொடர்பாடலை நடத்துவதற்கு இதனை பயன்படுத்தலாம்.

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் சூம் செயலியைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 227 சதவீத வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது.

சூம் என்பது இணைய அடிப்படையிலான 'கொன்பரன்சிங்' தளமாகும். இது, சர்வதேச அளவில் வணிக, கல்வி மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**சூமின் முக்கிய அம்சங்கள்:-**

1. தனிநபர்களுக்கிடையேயான சந்திப்புகள். இது இலவச திட்டமாகவுள்ளது. தனிநபர்களுக்கிடையேயான வரம்பற்ற சந்திப்புகளை நடத்த முடியும்.

2. குழு வீடியோ மாநாடுகள். இதில் 100 முதல் 500 பேர் பங்கேற்பாளர்கள் வரையறுக்கப்பட்ட மற்றும் அதற்கு மேலும் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதில் ஒரு நடத்துனர் (ஹோஸ்ட்) , பல நடத்துனர்களுக்கான வசதிகள் உள்ளன. இவை பணம்கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டிய வசதிகளாகும். அதே வேளை, இலவச திட்டமாக குழுக்கள் 40 நிமிட சேவையைப் பெறமுடியும். இதில் 100 பேர் மட்டுமே பங்கேற்க முடியும்.

3. திரை பகிர்வு. தனிநபர் சந்திப்பு அல்லது பெரிய குழுக்களுடன் சந்திப்பின் போது நடத்துனர் தமது கணனித் திரையைப் பகிர்ந்து கொள்ள முடியும். அவரது அனுமதியுடன் பங்குபற்றுபவர்களும் தங்கள் கணனித்திரையை ஏனையவர்களுக்குப் பகிர்ந்து கொள்ள முடியும். ஆகவே தமது காட்சிகள், ஒலிகள், இசை, வீடியோ என்று எல்லாவற்றையும் பங்குபற்றுபவர்களுடன் பகிர்ந்து கொள்ள வாய்ப்பேற்படுகின்றது.

4. பதிவு செய்யும் வசதி:- ஒவ்வொரு சூம் சந்திப்புக்களையும் பதிவு செய்து ஆவனமாக்கக் கூடிய வசதி காணப்படுகிறது.

### சூம் செயலிச் சேவைக்காக கிடைக்கப்பெறும் திட்டங்கள்

குழு அழைப்புகள், பயிற்சி அமர்வுகள் மற்றும் உள் மற்றும் வெளி பார்வையாளர்களுக்கான வெபினார்கள் மற்றும் 1,000 பங்கேற்பாளர்கள் மற்றும் ஒரே வேளையில் 49 திரை வீடியோக்களுடன் கூடிய வீடியோ சந்திப்புகள் போன்றவற்றை சூம் அனுமதிக்கிறது. இவையெல்லாம் வெவ்வேறு திட்டங்கள். இவற்றை பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக சூமில் நான்கு திட்டங்கள் உள்ளன.

1. சூம் இலவச திட்டம். இதில் இலவசமாக தனிநபர் சந்திப்பை வரம்பற்ற அளவு நடத்தலாம். 100 பேர் வரையான குழு சந்திப்புகள் 40 நிமிடத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

2. சூம் புரோ திட்டம்: இந்த திட்டம் மாதத்திற்கு 14.99 டொலர் என்ற அடிப்படையில் கிடைக்கிறது. இது 100 பேர் கொண்ட குழுவுக்கு வரையறையின்றி மீண்டும் மீண்டும் கூட்டங்களை உருவாக்க ஹோஸ்ட்களை அனுமதிக்கிறது. மேலதிக கட்டணத்துடன் பங்கேற்பாளர்களை 1000 ஆக அதிகரிக்க முடியும். தொடர்ச்சியாக ஒரு கூட்டத்தினை 30 மணித்தியாளங்கள் நடத்த முடியும்.

3. சூம் வர்த்தகத் திட்டம். இந்த திட்டம் மாதத்திற்கு 19.99 டொலர் மற்றும் 10 தொடக்கம் 99 வரையிலான ஹோஸ்ட்களை வைத்துக்கொள்ளலாம். நிறுவனத்தின் முத்திரையுடன் சூம் சந்திப்புக்களை நடத்த வழிவிடுகிறது. மேலும், இது 300 பேர் கொண்ட குழுவுக்கு வரையறையின்றி மீண்டும் மீண்டும் கூட்டங்களை உருவாக்க ஹோஸ்ட்களை அனுமதிக்கிறது. மேலதிக கட்டணத்துடன் பங்கேற்பாளர்களை 1,000 ஆக அதிகரிக்க முடியும். தொடர்ச்சியாக ஒரு கூட்டத்தினை 30 மணித்தியாலங்கள் நடத்த முடியும்.

> "சூம் சந்திப்புக்கள் தொழில்முறை ஆடையை வேண்டி நிற்கின்றன. அது வேலையில் இருப்பதைப் போலவே முக்கியமானது – இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வசதியான பணிச்சூழலைப் பராமரிக்கிறது வீடியோவை இயக்கும் முன், அழகாக, ஆடை அணிந்து, குழுவுடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். சந்திக்கும் அமைப்புகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்!"

4. சூம் எண்டர்பிரைஸ் திட்டம். இதில் மாதத்திற்கு 19.99 டொலர் செலவு ஏற்படுகிறது. 100 ஹோஸ்களை வைத்திருக்க முடியும். இதில் 500 பேர் கொண்ட சந்திப்புக்களுக்கானது. குறிப்பாக வணிகங்களுக்கானது. இது கூட்டங்களைப் பதிவு செய்வதற்கான வரம்பற்ற கிளவுட் ஸ்டோரேஜ், வாடிக்கையாளர் வெபினார்கள் மற்றும் சூம் ரூம்களில் தள்ளுபடி விலைகளை வழங்குகிறது. மேலதிக கட்டணத்துடன் பங்கேற்பாளர்களை 1,000 ஆக அதிகரிக்க முடியும். தொடர்ச்சியாக ஒரு கூட்டத்தினை 30 மணித்தியாலங்கள் நடத்த முடியும்.

சூம் செயலி டெஸ்க்டாப், விண்டோஸ் மற்றும் மாக்ஓ. எஸ்க்கு கிடைக்கிறது, மொபைல் பயன்பாடு ஆண்ட்ராய்டு மற்றும் IOS கிடைக்கிறது. டெஸ்க்டாப் பயன்பாடு சிறந்த அனுபவத்தை வழங்குகிறது. சூம் கணக்கு, கூகிள், பேஸ்புக் அல்லது எஸ்.எஸ்.ஓ. ஆகிய கணக்ககளைப் பயன்படுத்தி உள்நுழைய அனுமதிக்கின்றது. சூம் செயலியில் ஒரு சந்திப்பை மேற்கொள்ளும் போது முகப்புத்தகத்தில் (பேஸ்புக்கில்) நேரடியாக ஒளிபரப்பலாம், அதே போல் யு – 10ரியூப்பில் நேரலையாக ஒளிபரப்பமுடியும். அதற்கான திட்டத்தைத் தேர்வு செய்ய வேண்டும்.

சூம் செயலியில் மேலே குறிப்பிட்டதன்படி உள்நுழைந்த ஒருவர், முதலில் தனது ஓடியோவை இணைக்க வேண்டும். அதற்கு கணக்கு அமைப்புகளுக்குச் செல்வதன் மூலம் ஓடியோ செயல்படுவதை உறுதிசெய்து சோதிக்கலாம். அமைப்புகள் மெனுவின் கீழ் உள்ள 'ஓடியோ' விருப்பத்தைத் தேர்ந்தெடுத்து 'டெஸ்ட் ஸ்பீக்கர்' மற்றும் 'டெஸ்ட் மைக்' என்பதைக் கிளிக் செய்வதன் மூலம் உங்கள் ஆடியோவை நீங்கள் சோதிக்கலாம். நீங்கள் ஏற்கனவே கூட்டத்தில் உள்நுழைந்ததும் 'டெஸ்ட் ஸ்பீக்கர் மற்றும் மைக்ரோஃபோன்' என்பதைக் கிளிக் செய்வதன் மூலமும் இந்த மெனுவை அணுகலாம். இது 'கம்பியூட்டர் ஓடியோவுடன் சேர்' விருப்பத்தின் கீழ் இருக்கும்.

ஓடியோ இணைக்கப்பட்டதும் வீடியோவை இணைக்க வேண்டும். இதற்கும் ஓடியோ செயல்முறைக்கு ஒத்ததான செயல்முறையாகும். இதில் ஹோஸ்டின் அமைப்புகளைப் பொறுத்து, அறைக்குள் நுழைவதற்கு முன்பு வீடியோவுடன் இணையமுடியும். கனணியில் காணப்படும் வீடியோ கமராமூலம் இணையலாம். அல்லது வெப்கேமை இயக்க திரையின் கீழ் இடது மூலையில் உள்ள 'வீடியோவைத் தொடங்கு' பொத்தானை அழுத்தமுடியும்.

ஒரு சூம் கூட்டத்தில் பேசாத போது அதாவது எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை அல்லது கேள்விக்கு பதிலளிக்கவில்லை என்றால், மைக் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பது பொதுவான ஆசாரமாகும். இது பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது. இது, கூட்டத்தில் இரைச்சல் குறுக்கிடுவதையோ அல்லது இடையூறு செய்யவதையோ தடுக்கிறது. இதற்கு, 'நிறுத்து' பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் நிறுத்தலாம். மைக் ஐகானில் அதன் வழியாக சிவப்பு கோடு இருந்தால், நீங்கள் முடக்கியுள்ளீர்கள் என்று அர்த்தம். உங்களை தற்காலிகமாக முடக்க விரும்பினால், உங்கள் ஸ்பேஸ் பாரைக் கிளிக் செய்வதன் மூலம் அவ்வாறு செய்யலாம். அதாவது விரைவாக முடக்க இது அனுமதிக்கிறது.

சூம் அமர்வுகள் பதிவு (ரெக்கோடிங்) செய்யப்படலாம். இதற்கு ரெக்கோட் என்ற பொத்தானை அழுத்த வேண்டும். இது மேல் இடது கை மூலையில் உள்ள சிவப்பு வட்டத்தால் குறிக்கப்படுகிறது. சூம் கூட்டமொன்று நடைபெறும் போது பேச்சற்ற தொடர்பாடலுக்கான வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன. 'அரட்டை' (chat) பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் சூம் அரட்டை அம்சம் கிடைக்கிறது. கேள்விகளைக் கேட்கவும், கருத்துத் தெரிவிக்கவும், பரிந்துரைகளை வழங்கவும் இந்தப் பகுதியைப் பயன்படுத்தலாம். கூட்டத்தில் உள்ள அனைவருடனும் அரட்டையடிக்க இதனை தேர்வு செய்யலாம் அல்லது அரட்டை தனிப்பட்டதாக இருக்க விரும்பினால் ஒரு குறிப்பிட்ட நபரைத் தேர்ந்தெடுக்கவும். இந்த அரட்டைகளை ஹோஸ்டால் பார்க்க முடியும் மற்றும் சேமிக்க முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே எப்போதும் போல, எல்லா தகவல்தொடர்பும் களத்திற்கும் சூழலுக்கும் பொருந்தும் வகையிலேயே இருக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

சூம் சந்திப்புக்கள் தொழில்முறை ஆடையை வேண்டி நிற்கின்றன. அது வேலையில் இருப்பதைப் போலவே முக்கியமானது – இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வசதியான பணிச்சூழலைப் பராமரிக்கிறது வீடியோவை இயக்கும் முன், அழகாக, ஆடை அணிந்து, குழுவுடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சந்திக்கும் அமைப்புகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்! பகிர்வதைத் தவிர்க்க விரும்பும்போது 'வீடியோவை நிறுத்து' பொத்தான் ஒரு சிறந்த தேர்வாகும்.

சூம் என்பது தொலைதூர அணிகளுடன் தொடர்பு கொள்வதற்கான சிறந்த தளமாகும். தொடர்புகொள்வதற்கு சூமில் கிடைக்கக்கூய வசதிகள் எல்லாவற்றையும் பயன்படுத்துகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துவது முக்கியம்.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமந்திரனை உடன் நீக்குங்கள் சம்பந்தனுக்கு தவராசா கடிதம்

கட்சிக்கு எவரும் வாக்களிக்கவில்லையெனவும் கட்சி வாக்கால் தான் வெற்றி பெறவில்லையெனவும் தனது தனிப்பட்ட வாக்குகளினாலேயே வெற்றி பெற்றார் எனவும் ஆப்ரஹாம் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளமை கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் தரந்தாழ்த்திக் கேவலப்படுத்தும் அகங்காரமிக்க போக்காகும். இத்தகைய பொறுப்பற்ற நபர் தொடர்ந்தும் கட்சியில் இருப்பது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா காட்டமான ஒரு கடிதத்தை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கட்சியில் நான் இணைக்கப்பட்ட நாளிலிருந்து கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான உங்களிடம் ஒரு போதும் எந்தவிதமான வேண்டுகோள்களையும் நான் முன்வைத்தவனல்லன்., முன்வைக்கப் போபவனுமல்லன்.

தமிழ்த் தேசியத்தின் வலிமையான இருப்பின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு கீழ் காணும் வேண்டுகோள்களை முதலாவதும் இறுதியுமான வேண்டுகோள்களாக முன்வைக்கின்றேன்.

எனது வேண்டுகோள்களை கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் தீர்க்கமான முடிவை எடுக்காவிடின் தமிழ்த் தேசியத்தினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் எதிர்காலம் கேள்விக்குறியாகும்.

தங்களின் தலைமைத்துவக் காலத்தில் தமிழரின் அரசியல்வல்லமைசிதைக்கப்பட்டதுஎன்றஅவப்பெயரைச் சம்பாதித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற வார்த்தைகளை மொழியும் இக்கட்டான தருணத்துக்கு தாங்கள் வந்து விடக் கூடாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம்....?

கட்சிக்கு எவரும் வாக்களிக்கவில்லையெனவும் கட்சி வாக்கால் தான் வெற்றி பெறவில்லையெனவும் தனது தனிப்பட்ட வாக்குகளினாலேயே வெற்றி பெற்றார் எனவும் ஆப்ரஹாம் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளமை கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் தரந்தாழ்த்திக் கேவலப்படுத்தும் அகங்கார மிக்க போக்காகும்.

இத்தகைய பொறுப்பற்ற நபர் தொடர்ந்தும் கட்சியில் இருப்பது தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதான தொனியில் கருத்து வெளியிட்டமை தொடக்கம் தமிழர்களுக்கு எதிராக இனவழிப்பு நடைபெறவில்லை என்பது வரை இவரது கருத்துக்கள் பாரதூரமானவை.

கட்சியின் பேச்சாளர் நியமிக்கப்படாத நிலையில் இத்தகு கருத்துகள் கட்சியைப் பாதிப்படையச் செய்கின்றமை தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஆப்ரஹாம் சுமந்திரன் பிரக்ஞையற்றுச் செயற்படுதலானது எவ்வகையிலும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல என்பது மட்டுமன்றி தமிழ் இனம் இந்த நாட்டில் இருந்தது என்பதற்கே அடையாளம் இல்லாமல் செய்யும் செயற்பாடாகும்.

தமிழ் மக்களின் அதிகப் பெரும்பான்மை ஆணையைப் பெற்றுத் தமிழர்களின் தலைமைத்துவத்தைச் சுமந்து திறம்பட வழிநடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் ஆணையை இழந்து கொண்டு செல்கின்ற இந்தச் சூழ்நிலையில் அதற்கான காரணங்கள் பற்றிய ஆய்வு மிகவும் முக்கியமானது.

மனந்திறந்த வெளிப்படையான கருத்தாடல் முறைமை செவ்வையான வழியாகத் தோன்றுகின்றது. கட்சியின் பொறுப்பு வாய்ந்த அனைத்து நிர்வாகிகளும் கட்சியைப் பலப்படுத்தி மீளவும் அரசியல் ரீதியில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழர்களின் ஏக குரலாக ஒலிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக இருக்க வேண்டிய காலத்தில் நாம் இருக்கின்றோம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்ற பின்னர் இன்னும் சரியான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவி நிலைகள் உரியவர்களுக்கு அளிக்கப்படாத இடைவெளியில் கட்சியின் இருப்பைச் சிதைக்கும் பல்வேறு கருத்தாடல்கள் தொடர்ந்தும் ஊடகங்களில் பேசுபொருளாக இருக்கின்றமையை அவதானிக்கின்றோம்.

அந்த வகையில் மிகவும் வெளிப்படையாகப் பேசுவதுதான் இந்த இடத்தில் எமது கட்சியின் இருப்புக்கும் எதிர்காலத்துக்கும் சிறந்தது என்ற அடிப்படையில் முக்கியமான சில விடயங்களைத் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

இன்னும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஓர் ஊடகப் பேச்சாளர் நியமிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆப்ரஹாம் சுமந்திரன் தன்னைக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் போன்று பிரதிபலித்தபடி தொடர்ந்தும் சர்ச்சையான கருத்துக்களைப் பொதுவெளியில் தெரிவித்து வருகின்றமை கட்சியில் அரசியல் இருப்புக்கும் உறுதிப்பாட்டுக்கும் சவலாக அமைந்துள்ளது.

பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதான தொனியில் கருத்து வெளியிட்டமை தொடக்கம் இப்போது கடைசி யுத்தத்தில் இனவழிப்பு நடைபெறவில்லை என்பது வரையான பொதுவெளிக் கருத்துகள் சுமந்திரன் த.தே. கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் என்ற கோதாவிலேயே தொடர்ச்சியாகப் பரப்புரை செய்யப்பட்டு வந்த நிலையில் 2021 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11 ஆம் திகதி கப்பிட்டல் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் கட்சிக்கு எவரும் வாக்களிக்கவில்லையெனவும் கட்சி வாக்கால் தான் வெற்றி பெறவில்லையெனவும் தனது தனிப்பட்ட வாக்குகளினாலேயே வெற்றி பெற்றார் எனவும் குறிப்பிட்டுள்ளமை கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் தரந்தாழ்த்திக் கேவலப்படுத்தும் அகங்காரமிக்க போக்காகும்.

இத்தகைய பொறுப்பற்ற நபர் தொடர்ந்தும் கட்சியில் இருக்கின்றமை தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

கட்சி தோல்வி அடைந்துவிட்டது எனக் கட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டரீதியற்ற பேச்சாளனாக செயற்பட்டு கட்சியை இல்லாதொழிக்கும் ஆப்ரஹாம் சுமந்திரனின் இந்தச் செயல்பாட்டில் ஒன்றியிருக்கும் நிகழ்ச்சி நிரலின் பின்னணி என்ன?

ஆப்ரஹாம் சுமந்திரனால் தனிப்பட்ட கருத்துகளாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் கட்சியின் கருத்தாக பிரதிபலிக்கச் செய்யப்படுவதும் மக்கள் அதை அப்படியே உள்வாங்கிக் கொள்வதும் கூட்டமைப்பின் வாக்கு வங்கியைத் தொடர்ந்தும் சிதைப்பது மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாதொழிக்கும் பாரிய பணியைச் செய்யும் செயற்பாடுமாகும்.

மேற்படி நபர் கூட்டமைப்பின் பேச்சாளர் அல்லர் என்பதைக் கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் நீங்கள் விரைவாக ஊடக அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து குறித்த நபரால் ஏற்படுத்தப்பட்ட களங்கத்தையும் நற்பெயருக்கு ஏற்பட்ட சிதைவையும் ஓரளவுக்காவது சரிசெய்வதுடன் பொருத்தமான தமிழ்த் தேசிய உணர்வாளர் ஒருவரை கட்சியின் பேச்சாளராக நியமிப்பதனூடாக இந்தக் காரியத்தை இன்னும் திறம்படச் செய்ய முடியுமாக இருக்கும்.

தலைமைத்துவத்தை மீறி தலைமையின் செல்வாக்கைக் கேள்விக்குள்ளாக்கி விகடமாக்கிடும் இந்தச் செயற்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்தி. கட்சியின் பலத்தை மீளவும் நிலைபெறச் செய்ய தாங்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள் என்று திடமாக நம்புகின்றோம்.

ஒரு தனி நபரின் தன்னிச்சையான செயற்பாடுகளும் கருத்துகளும் இதற்கு முந்தியொருபோதும் இப்படிக் கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவில்லை.

மக்களின் நம்பிக்கையை வென்று மேலும் கட்சியின் ஸ்திரப்பாட்டை நிலைப்படுத்த தலைமைத்துவம் வேகமாகச் செயற்படும் என்ற எதிர்பார்ப்பு வீண் போகாது என்றே நம்புகின்றோம்.

ஆப்ரஹாம் சுமந்திரன் கட்சியின் ஊடகப் பேச்சாளராக இருந்த போது தமிழ் மக்களின் விருப்பத்துக்கும் எதிர்பார்ப்பிற்கும் நேர்மாறாகத் தெரிவித்த சில கருத்துகள் மக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்திய போது அந்தக் கருத்துக்கள் கட்சியின் கருத்துகளல்ல, அவை அவரது தனிப்பட்ட கருத்துகளே என்று நீங்களே அறிக்கையிட்டும் தொலைக்காட்சி நேர்காணலிலும் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்த சந்தர்ப்பத்தையும் உங்



களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாகக் கட்சியில் எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி எனது பங்கை ஆற்றி வருகின்றேன்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சியில் உள்ள ஏதேனுமொரு பதவி நிலையைக் கோரியோ அல்லது தேர்தல் காலத்தில் போட்டியிடுவதற்கு இடமொதுக்கக் கோரியோ அல்லது தேசியப் பட்டியலில் நியமிக்கும்படியோ ஒரு போதும் நான் எனக்காகத் தலைவர் என்ற வகையில் உங்களிடமோ அல்லது வேறு நிர்வாகிகளிடமோ விண்ணப்பஞ் செய்தவனல்லன். தமிழ் மக்களின் உணர்வுகளுக்காகவே முழுமையாக எந்த எதிர்பார்ப்புமின்றிக் கட்சியை நேசிக்கின்றேன்.

அந்த அடிப்படையில் கட்சியின் இருப்பு மீது எனக்கு அதீதமான அக்கறை இருக்கின்றமை இயல்பானதே. ஆகவேதான் ஒற்றை நபருக்காகக் கட்சியை அடமானம் வைக்கத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் கட்சியினுள்ளே பலர் இருக்கின்றமையைத் தலைமையின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது எனது கடமையுமாகும்.

அடுத்து வரும் தேர்தலைச் சந்திப்பதற்கு முன்னரே பொறுப்புள்ள நிர்வாகிகள் கட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுத்து சரிவிலிருந்து கட்சியைப் பாதுகாத்து மக்கள் உரிமைக்கான ஏக குரலாக கூட்டமைப்பு திகழ்வதை நாம் உறுதிப்படுத்தியாக வேண்டும்.

மோசமான விமர்சனங்கள் நாளுக்கு நாள் கட்சியின் நற்பெயரைச் சிதைத்துக்கொண்டே இருக்கின்றன என்பதையும் தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். தந்தை செல்வா முதற்கொண்டு இப்போது வரைக்குமான காலத்தில் தமிழர்களின் ஒற்றைக்குரலாக நமது குரல் இருந்துள்ளது.

பலமிக்க நிலையில் அதை மீளவும் நிலைநிறுத்தி உறுதிப்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும். இதன் அவசரத்தையும் அவசியத்தையும் உணர்ந்து தீர்க்கமான முடிவொன்றை விரைவாகத் தலைமை எடுக்க வேண்டுமென்று அவாவி நிற்கின்றேன்.

இந்த விடயத்தைக் கருதிற்கொண்டு தீர்க்கமான முடிவை எடுக்காவிடின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். தங்களின் தலைமைத்துவக் காலத்தில் தமிழரின் அரசியல் வல்லமை சிதைக்கப்பட்டது என்ற அவப்பெயரைச் சம்பாதித்துவிடக்கூடாது. கடந்த கால நெருக்கடி நேரத்தில் அரசியலில் ஆக்ரோசமிக்க தமிழரின் குரலாக நீங்கள் இருந்துள்ளீர்கள்.

இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வார்த்தைகளை மொழியும் இக்கட்டான தருணத்துக்கு தாங்கள் வந்து விடக் கூடாது என்ற நன்னோக்கைப் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கின்றேன். ஏனெனில் மக்கள் அப்படியொரு பிரயோகத்தை தங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

இந்த இக்கட்டான நிலையில் தங்களின் கடமையைச் சரியாகச் செய்யாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வரலாறு இறுதி அத்தியாயத்தை எழுதிக் கொள்ளும் என்பதைத் தாங்களும் நன்கு அறிவீர்கள்.

அவ்வாறு நிகழ்ந்தால் அந்த வரலாற்றுத் தவறுக்குப் பொறுப்பாளியாக தாங்களே இருக்க நேரிடும் என்பதையும் புரிந்து வைத்திருப்பீர்கள். அத்தகைய வரலாற்றுத் தவறையல்ல வரலாற்றுத் தப்பை தாங்கள் செய்ய மாட்டீர்கள் என்று திடமாக நம்புகின்றேன். தமிழ்த் தேசியத்தின் வலிமையான இருப்பின் அவசியத்தைக் கருதி இந்த விடயத்தில் மேலதிக கால விரயத்தைத் தவிர்த்து விரைவாக முடிவெடுக்கும் படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனைவியோடு ஏற்பட்ட தர்க்கத்தால் கடையைக் கொளுத்தினார் கணவர்

திருகோணமலை – மொரவெள எட்டாம் வாய்க்கால் பகுதியில் சில்லறை கடையொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது எனபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டு தினத்தில் கணவருக்கும், மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட வாக்கு வாதத்தில் சனிக்கிழமை மது அருந்தி வீட்டுக்கு வந்து கடைக்கு தீ வைத்தார் என ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சில்லறை கடையின் அனைத்துப் பொருள்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன எனவும், திருகோணமலை தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனாலும் மதுபோதையில் கடைக்கு தீ வைத்த கணவர் தலைமறைவாக இருந்த நிலையில் பொலிஸ் நிலையத்துக்கு வந்து சரணடைந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடைக்குத் தீ வைக்கப்பட்டமையால் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# எமது குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாட்டின் முன்னேற்றத்துக்கு அர்ப்பணிப்போம்

## மஹிந்த அமரவீர உறுதி



எதிர்க்கட்சி குறிப்பிடுவதைப் போன்று கொழும்பு துறைமுக நகரத்திற்குள் பிரத்தியேக சட்டம், பிரத்தியேக இராணுவம் என்றவாறாக செயற்பாடுகளை முன்னெடுக்க நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. எனினும் அவ்வாறானதொரு நிலைமை உருவாகும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர ஆணைக் குழு சட்டமூல சர்ச்சை தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

பிறந்துள்ள தமிழ் - சிங்களப் புத்தாண்டில் கடந்த காலத்தில் அரசாங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய பாதையில் பயணிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்தப்பயணத்தில்நாட்டைஅபிவிருத்தி யடைச் செய்வதே எமது பிரதான இலக்காகும். இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக உருவாக்குவதற்கான பொறுப்பு ஜனாதிபதி உள்ளிட்ட எம் அனைவரினதுமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் நாட்டின் மேம்பாட்டிற்கான வேலைத்திட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது எமது இலக்காகும்.

கொவிட் தொற்றின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகள் மற்றும் மேற்குலக நாடுகளால் ஏற்பட்ட நெருக்கடிகள் உள்ளீட்டவை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இவை அனைத்தையும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து நாட்டுக்கு உரித்தான விடயங்களை செயற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.

எமது பதவிகளை தக்க வைத்துக் கொள்வதும், ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதும் தற்போது எமது எதிர்பார்ப்பல்ல. எனவே நாம் அனைவரும் எம்மிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாட்டின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

அவ்வாறான நிலைமை உருவாகும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. இந்த சிக்கல் தொடர்பில் பேச்சு மூலம் தீர்வு காண முடியும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

எவ்வாறிருப்பினும் எத்தகைய தீர்மானமாயினும் கட்சி ரீதியிலேயே அதனை நாம் முன்னெடுப்போம். அந்த தீர்மானம் நாட்டுக்கு சாதகமான தீர்மானமாக அமையுமே தவிர ஒருபோதும் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்காது. - என்றார்.

# துறைமுக நகரில் சீன பொலிஸ் என்ற பேச்சுக்கே இடமில்லை

## என்கிறது அரசு

கொழும்பு துறைமுக நகரத்தில் சீன காவல்துறை என்ற கருத்துக்கு இடமில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை இலங்கை காவல் துறை மட்டுமே நிர்வகிக்கும் என்று நிதி மற்றும் மூலதன சந்தை மற்றும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரம் ஒரு சீன குடியிருப்பாக இருக்கும், அங்கு சீன காவல்துறை சட்டம் ஒழுங்கை நிர்வகிக்கும் என்ற கூற்றை அமைச்சர் மறுத்துள்ளார்.

இதற்கு மாறாக கொழும்பு துறைமுக நகரம் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

# துறைமுக நகர சட்ட மூலத்தால் பௌத்தத்துக்கு முதலிடம் ஒழியும்

## சட்டத்தரணி அருண லக்சிறி உணவட்டுன

கொழும்பு, ஏப். 19

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின் ஊடாக இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 9 ஆவது சரத்தில் உள்ள பௌத்த சமயத்துக்கு முதலிடம் என்பது இல்லாமல் போகும் என சட்டத்தரணி அருண லக்சிறி உணவட்டுன தெரிவித்துள்ளார்.

இதனை சுட்டிக்காட்டி அவர் புத்தசாசனம், சமய விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதன் காரணமாக குறித்த சட்டமூலம் தொடர்பாக எதிர்காலத்தின் சட்ட நடவடிக்கை எடுக்கும் போது, அரசமைப்புச் சட்டத்தின் 9 ஆவது சரத்தைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளை செய்யுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஹொங்கொங் போன்று நாட்டை ஆள முடியாது

## கூறுகின்றார் விதுர

எமது நாட்டை ஹொங்கொங் போன்று ஆள முடியாது என தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த ஊடக சந்திப்பில் விதுர விக்ரமநாயக்க மேலும் கூறியுள்ளவை வருமாறு -

'நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் சட்டம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் ஹொங்கொங் போன்ற தனி நிர்வாகப் பிரிவை நாட்டில் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. முதலீட்டாளர் யார் என்பது முக்கியமல்ல. நிலம் தொடர்பிலான சட்டம் அனைவருக்கும், எல்லா இடங்களுக்கும் பொருந்தும். அத்துடன் இந்த நடவடிக் கைகள் மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டமையால் அது நாட்டின் முன்னேற்றத்துக்கு பெரும் உத்வேகத்தை அளிக்குமென்று நம்புகின்றேன்' - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்குகிறது

## ஆளுநர் சார்ள்ஸ் பெருமிதம்



அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஒத்துழைப்பு கிடைக்கின்றது என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நாம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோடும் திணைக்களங்களுடனும் பேச்சுகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்தவகையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர்களின் ஒத்துழைப்பு நன்றாகவே கிடைக்கின்றது என்பதைக் குறிப்பிட முடியும்.

உண்மையில் வடக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றனர்.

மக்களுக்கான செயற்திட்டங்களில் அவர்கள் ஒத்துழைப்புடன் செயல்படுகின்றனர் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கிழக்கில் அவ்வாறான நிலை காணப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

# மியன்மாரில் தடுத்துவைக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

மியன்மாரில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 12 இலங்கை மீனவர்களை மியன்மார் அதிகாரிகள் விடுவித்துள்ளனர் என மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

2021 பெப்ரவரியில் இந்த இலங்கை மீனவர்கள் மியன்மார் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மாத்தறை கடற்கரையில் கரையொதுங்கிய சடலம்

மாத்தறை வெலிகமவில் உள்ள கலுவெல்ல கடற்கரையில் கடந்த சனிக்கிழமை முற்பகல் சடலமொன்று கரையொதுங்கியுள்ளது.

ஆண் ஒருவரின் சடலமொன்று இவ்வாறு கரையொதுங்கியுள்ளது என வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

உடல் அடையாளம் காண முடியாத வகையில் சிதைவடைந்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக சடலம் மாத்தறை வைத்தியசாலையின் பிரேத அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## இயந்திரம் மூலமான நெல் நாற்று நடுகைக்கு நிலத்தைப் பண்படுத்துவது எப்படி



நாற்று நடுவதற்கு 25 நாள்களிற்கு முன்னர் நிலத்தை நன்கு ஆழமாக சட்டிக் கலப்பையால் உழுது மண்ணைப் புரட்டி 10 நாள்கள்வரை உலர விட வேண்டும்.

இதன் போது மண்ணின் வளமான கூறுகளுடன், களை விதைகளும் நிலத்திற்கு மேலே கொண்டு வரப்படுவதால், களைகள் முளைக்க ஏதுவாக அமையும். இரண்டாவது தடவை உழுத பின் நீரைக் கட்டி வைக்கும் போது முளைத்த களைகள் அழுகுவதால் அவற்றைக் கட்டுப்படுத்த ஏதுவாக அமையும்.

பத்து நாள்களின் பின்னர் நிலத்தை மீண்டும் புரட்டி சுழற் கலப்பையின் உதவியுடன் தூர்வையாக்க வேண்டும். இரண்டாவது தடவை பண்படுத்திய பின்னர் நீரை விட்டுக் கட்டி வயலை நன்கு புளிக்க விடல் வேண்டும்.

இவ்வாறு பத்து நாள்கள் வரை நீரைக் கட்டி வைக்க வேண்டும். நாற்று நடுவதற்கு 04 நாள்களிற்கு முன் மீண்டும் வயலை நன்கு கலக்கி (சேறடித்து), மட்டப்படுத்த வேண்டும். அடுத்த நாள் நீரை வடிய விடல் வேண்டும். அதாவது நடுவதற்கு 03 நாள்களின் முன் நீரை வடியவிடல் வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆம் திருத்தத்துக்கு வாக்களித்த எம்.பிக்களுக்கு பாவமன்னிப்புப் பெற சந்தர்ப்பம் இதோ வருகிறதாம்

## தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறுகிறார்

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக அணி மாறி வாக்களித்த தமிழ்ப் பேசும் எம்.பிக்களுக்கு, நாம் இந்த சட்டமூலங்களுக்கு ஆதரவளிக்க 'மாட்டோம்', 'மாட்டோம்' என இரண்டு முறை தாம் இப்போது அங்கம் வகிக்கும் அரசுக்கு இடித்துக்கூறி, பாவமன்னிப்பு பெற சந்தர்ப்பம் வருகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும் முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கருமமொழிகள், சமூக மேம்பாடு, இந்து கலாசார அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இன்றைய அரசாங்கம், நாடாளுமன்றத்தில் இரண்டு சட்ட மூலங்களைக் கொண்டு வந்து நாட்டையும், இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களையும் ஆபத்தில் போடத் திட்டமிடுகிறது. இந்த ஆபத்துகள் இன்று எம் கண் முன்னே தெரிகின்றன.

ஒன்று, நமது தமிழ் பேசும் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களை அழித்து, ஒழிக்கும் உத்தேச இரகசிய திட்டமிடலும், முயற்சியும் ஆகும். அதாவது, இந்நாட்டில் இன்றுள்ள தேர்தல் முறை சட்டங்களைத் திருத்தியமைக்க, இவர்கள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கொண்டுவரத் திட்டமிடும் சட்டமாகும்.

இரண்டாவது, இந்நாட்டில் நிலவும் சட்டங்களிலிருந்து விலக்களித்து, சீன நாட்டுக்கு விசேட சலுகைகளை அளித்து, கொழும்பு தலைநகரை ஒட்டி, மேற்கு கரையில் அமைகின்ற, தனியொரு நிர்வாகம் கொண்ட துறைமுக நகர் ஆகும்.

இந்நாட்டில் தமிழ் மக்களின் ஜனத்தொகையில் 50 வீதமும், முஸ்லிம் மக்களின் ஜனத்தொகையில் 65 வீதமும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே, தென்னிலங்கையில் வாழ்கிறார்கள். இப்படி பரவி, விரவி வாழும் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை பிரதிநிதித்துவங்களை இல்லாமல் ஒழிக்கும் புதிய தேர்தல் முறைமையை, இன்றைய அரசின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன கொண்டு வர முயல்கிறது.

அதிஷ்டவசமாக, இன்று அரசின் உள்ளே இருக்கும் பங்காளி சிறுகட்சிகளின் இருப்பையும் இந்த புதிய தேர்தல் முறை யோசனைகள் சவாலுக்கு உட்படுத்துகின்றன. ஆகவே அரசுக்கு உள்ளே இருக்கும், சிங்கள மக்களை பிரதிநித்துவம் செய்யும் சிறு பங்காளி கட்சிகள் இதை அரசுக்கு உள்ளேயே இருந்து எதிர்க்கின்றன. நாளை (இன்று) இந்த கட்சிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுடன் இது தொடர்பில் கலந்துரையாடுகின்றன.

ஆனால், அரசின் உள்ளே இருக்கும் தமிழ், முஸ்லிம் பங்காளி கட்சியினரும், 20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக அரசு பக்கம் தாவிய எம்.பிக்களும் அமைதி காக்கின்றனர். இது இன்று தமிழ் பேசும் மக்களின் சாபக்கேடாக இருக்கிறது.

இன்று இருக்கும் தமிழ் பேசும் எம்.பிக்கள், அமைச்சர்கள் நாளை இல்லாமல் போகலாம். ஆனால், இந்த நாடு இருக்கும். இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழத்தான் போகிறார்கள். இந்த உத்தேச தேர்தல்முறை மாற்ற முயற்சி, 20 ஆம் திருத்தத்தை விட மிக மிக ஆபத்தானது. எமது மக்களின் இருப்பை இந்நாட்டில் இல்லாமல் செய்யும் உள்நோக்கம் கொண்டது.

ஆகவே எதிர்காலத்தில் எமது தமிழ், முஸ்லிம் இனங்களின் பிரதிநிதித்துவங்களை இல்லாமல் செய்யும் சட்ட மூலங்களுக்கு முட்டாள்தனமாக கையைத் தூக்கி, வரலாற்றின் சாபத்துக்கு மீண்டும் ஒருமுறை உள்ளாக வேண்டாம் என சம்பந்தபட்டவர்களுக்கு கூறி வைக்க விரும்புகிறேன்.

கடந்த அரசில் பங்காளி கட்சி அமைச்சர்களாக நாம் இருக்கும் போது, நமது மக்களின் இருப்புக்கு ஆபத்து வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் உரக்க குரல் கொடுத்து அரசுக்கு உள்ளேயே சண்டையிட்டு, எமது இருப்பை உறுதி செய்தோம் என்பதையும் இங்கே நான், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் என்ற முறையில் பெருமையுடன் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல், அடுத்த தேசிய ஆபத்து, சீன நாட்டுக்கு விசேட சலுகைகளை அளித்து, இந்நாட்டில் நிலவும் சட்டங்களிலிருந்து விலக்களித்து, கொழும்பு தலைநகரை ஒட்டி, மேற்கு கரையில் அமைக்கின்ற தனியொரு நிர்வாகம் கொண்ட துறைமுக நகர் ஆகும். இதற்கான விசேட வர்த்தமானி பிரகடனம் வெளியாகி விட்டது.

நாளை (இன்று) நாடாளுமன்றக் கட்சித் தலைவர் கூட்டத்தில், இது தொடர்பில் பேசப்படும். நீதிமன்ற தீர்ப்புகளுக்கு பின் இந்த சட்டமூலம் நாடாளுமன்றம் வருமா, இல்லையா, வருமானால், வரும் திகதி என்பவை மீண்டும் கட்சி தலைவர்கள் கூடி முடிவு செய்வோம்.

இந்நிலையில், 20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக அணி மாறி வாக்களித்த தமிழ் பேசும் எம்.பிக்கள் ஒன்று கூடி, சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்களை ஒழிக்கும் தேர்தல் முறைக்கு ஆதரவாக நாம் வாக்களிக்க மாட்டோம் என்றும், துறைமுக நகரை சீனாவுக்கு தாரை வார்க்கும் சட்டமூலத்துக்கு ஆதரவாக நாம் வாக்களிக்க மாட்டோம் என்றும், தாம் இன்று அங்கம் வகிக்கும் அரசுக்கு உறுதியாக இடித்துரைக்க வேண்டும் என நான் இந்நாட்டின் தமிழ், முஸ்லிம் மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். - என்று தெரிவித்துள்ளார்

## மன்னாரில் கௌரவிக்கப்பட்டார் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா



பல காலமாக சிறையில் இருப்பவர்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கின்றவர்கள்தான் எமக்குத் தேவையென மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர மண்டபத்தில் துணிச்சலுள்ள பெண் மணிக்கான சர்வதேச விருதினைப் பெற்ற சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜாவை வரவேற்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மேலும் கூறியுள்ளவை வருமாறு -

எமது சமூகத்திலுள்ள பெரும்பாலானோர் பல்வேறு இன்னல்களுக்குமுகம்கொடுத்துவாழ்ந்து வருகின்றனர்.

சிறைத் தண்டனை அனுபவிப்போர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் என பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழ்கின்றவர்களையே அதிகளவு சமூகத்தில் காண்கின்றோம்.

ஆகவே மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களுக்காகக் குரல் கொடுக்கின்றவர்களே தற்போது எமக்குத் தேவைப்படுகின்றனர்.

இதேவேளை சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜா, தனது இளம் வயதில் மக்களுக்காகக் குரல் கொடுத்தமையால்தான், துணிச்சலுள்ள பெண்மணிக்கான சர்வதேச விருதினைப் பெற்றுள்ளார்.

அவர் மக்களுக்காகக் குரல் கொடுத்து மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தர தயாராக இருக்கின்றமையை எண்ணி இறைவனுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஹற்றன் - டிக்கோயா போடைஸ் பகுதியில் வெள்ளம்; 50 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன!

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட டிக்கோயா போடைஸ் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால், 50 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டனர்.

குறித்த பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும் தோட்டப்பகுதியில் அமைந்துள்ள சிறிய ஆறு பெருக்கெடுத்ததாலேயே இவ்வாறு வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

எனினும் நீர் வடிந்து சென்றதன் பின்னர், அவர்கள் தங்களுடைய வீடுகளுக்குச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் மழைக் காலங்களில் ஆற்றுநீர் பெருக்கெடுப்பதால் பல இடர்களை சந்திப்பதாக இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, ஹற்றன் டயகம பிரதான வீதியின் போடைஸ் பகுதியிலான வீதி சனி மாலை நீரில் மூழ்கியது. இதனால் பல மணி நேரம் அவ்வீதியினூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கு சனிக்கிழமை இரவு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நிலைமைகளை நேரடியாக பார்வையிட்டதுடன், மக்களின் கருத்து களையும் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, குறித்த ஆற்றை அகலப்படுத்தி இப்பிரதேசத்திற்கு வெள்ளம் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் இதன் போது உறுதியளித்தார்.

## முஸ்லிம்களுக்கு மட்டும் கொவிட் காரணங்காட்டி தடை எதற்காக?

### இம்ரான் மஹரூப் கேள்வி



கொவிட் தொற்றை காரணம் காட்டி முஸ்லிம்களுக்கு மட்டும் தடைகள் விதிக்கப்படுகின்றமை ஏன் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிண்ணியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்கள் இனவாத ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவார்கள் என நாம் அன்றே எச்சரித்திருந்தோம். நாம் கூறிய படி தற்போது ஒவ்வொன்றாக நடந்து வருகிறது.

அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைக் கையிலெடுத்தே அந்த அதிருப்தியை மறைக்கிறார்கள். உயிர்த்த ஞாயிறு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட சிங்கள அமைப்புக்கள் எதனையும் தடை செய்யாது முஸ்லிம் அமைப்புக்களை மாத்திரம் தடை செய்துள்ளனர்.

ரமழான் மாதத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சால் முஸ்லிம்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பள்ளிவாசலில் நூறு பேருக்கு மேல் ஒன்று கூட முடியாது. நோன்பு கஞ்சி பகிர முடியாது என அதில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் புத்தாண்டை முன்னிட்டு மக்கள் கடை வீதிகளிலும், பொது இடங்களிலும் ஆயிரக்கணக்கானோர் சமூக இடைவெளியின்றி ஒன்று கூடியமையை நாம் கண்டோம்.

மதுபானசாலைகளில் பெரிய கூட்டமே கூடி இருந்தது. ஆகவே புத்தாண்டில் தடைகளை விதிக்காத அரசு ஏன் ரமழான் மாதத்தில் முஸ்லிம்களுக்கு மாத்திரம் தடைகளை விதிக்க வேண்டும்.

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் முஸ்லிம்களுக்கு மாத்திரம் தான் கொவிட் தொற்றுவது போன்று முஸ்லிம்களுக்கு மட்டும் தடைகள் விதிக்கப்படுகின்றமை ஏன் என்றே நாம் கேட்கிறோம். இதற்கு பின்னாலும் பெரிய இனவாத நிகழ்ச்சி நிரல் உள்ளது.

இந்தக் காலத்தில் இடம்பெறும் முஸ்லிம்களின் வியாபாரத்தை முடக்குவதே இந்த அரசின் நோக்கம். மே மாதத்தில் கொவிட் மற்றோர் அலை உருவாகலாம் என இராணுவத் தளபதி ஏற்கனவே அறிவித்து விட்டார்.

ஆகவே மே மாதத்தில் இடம்பெறும் பெருநாள் வியாபாரத்தை முடக்க அரசு திட்டமிட்டுள்ளதா என்ற சந்தேகம் இதனால் இப்போது எழுகிறது. தற்போது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதித் தடையால் முஸ்லிம் வியாபாரிகள் பலரே பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மேலும் சிரமத்துக்கு உள்ளாக்கவே அரசு திட்டமிட்டு வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு துறைகளிலும் முஸ்லிம்களை பழிவாங்கவே இந்த அரசு முயற்சிக்கிறது. ஆனால் காப்பெட் வீதி மற்றும் பாலங்களில் இருந்து வரும் தரகுப் பணங்களுக்காக சிலர் பஸில் வந்தால் சரியாகும், நாமல் வந்தால் சரியாகும் என ஊருக்குள் கூறித் திரிகின்றமை வேடிக்கையானது என்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸாத் ஸாலியை வதைக்கும் அரசு!

## சிறப்பு விசாரணை ஆரம்பம் என்கின்றார் சரத் வீரசேகர



மேல் மாகாண முன் னாள் ஆளுநர் அஸாத் ஸாலி நாட்டில் தீவிரவாதத்தை வளர்த்துப் பாதுகாத் தாரா என்பது தொடர்பான விவரங்களை அறிய சிறப்பு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரி'வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அஸாத் ஸாலி ஆளுநர் பதவியில் இருந்த வேளை யில் தீவிரவாதத்தை வளர்ப்பதற்கும், அது தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் எவ்வாறு பாடு பட்டார்என்பதுகுறித்ததகவல்கள்சேகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. இணைந்து சிறப்பு விசாரணையைத் தொடங்கியுள்ளன.

மாவனெல்லயில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட விவகாரம் மற்றும் வணாத்தவில்ல பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைப் பாதுகாத்த குற்றச் சாட்டில் முன்னாள் ஆளுநருக்கு எதிராக ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், முஸ்லிம் பள்ளிவாசல்கள், உள்ளூர் மதர ஸாக்களில் தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்புவதற்கு உதவியது போன்ற குற்றச்சாட்டின் பேரிலும் அஸாத் ஸாலி விசாரிக்கப்படுகின்றார் - என்றார்.

# பரவிப்பாஞ்சான் குளத்தில் 2 சிறுவர்கள் மூழ்கிப் பலி!

## முள்ளிப்பொத்தானையில் சோகம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை- தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பரவிபாஞ்சான் குளத்திற்கு குளிக்க சென்ற இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வனர்த்தம் இன்று காலை 10.00 மணியள வில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த சிறுவர்கள் முள்ளிப்பொத் தானை,ஈச்சநகர் பகுதியைச் சேர்ந்த சுஹைல் சக்தி (13வயது) மற்றும் முள்ளிப்பொத்தானை - 95யைச் சேர்ந்த அலிபீத்ன் அஸ்கார் (13 வயது) எனவும் தெரிய வருகின்றது.

நோன்பு பிடித்துக் கொண்டு சிறுவர்கள் சிலர் சேர்ந்து தம்பலகாமம் - முள்ளிப்பொத்தானை பிரதே சத்தில் உள்ள பரவிப்பாஞ்சான் என்ற குளத்துக்கு குளிக் கச் சென்ற போது இவர்கள் நீரில் மூழ்கி னர் என்று கூறப்படுகின்றது. இருவரும் மீட்கப்பட்டு கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அச்சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவர்களின் சடலம் தற் பொழுது கந்த ளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலை ஆரம்பம் பற்றி கல்வி அமைச்சு அறிவிப்பு

திங்கட்கிழமை தொடக்கம் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளினதும் இரண்டாம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் நிலையில், இது தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, வகுப்பறையில் காணப்படும் மாண வர்களின் எண்ணிக்கை 15இற்கு குறைவெனில், சகல மாணவர்களையும் தினமும் பாடசாலைகளுக்கு வர வழைக்க முடியும். 16 முதல் 30 வரையான மாண வர்கள் வகுப்பறைகளில் இருப்பார்களாயின் இரண்டு பிரிவுகளாக அவர்களைப் பிரிக்கவும். 30 இற்கு மேல் மாணவர்கள் இருப்பார்களா யின் 3 பிரிவுகளாக பிரித்து மாணவர்களை பாடசாலைகளுக்கு வரவழைக்க முடியு மென,அமைச்சின்செயலாளர்பேராசிரியர் கபில பெரேரா அறிக்கை மூலம் குறிப்பிட்டுள்ளார்.

# கோட்டாபயவின் அச்சுறுத்தலை அம்பலப்படுத்திய விஜேதாஸவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தீர்மானம்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள் ளது.

ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஒரு அமைப்பைக் கொண்டுள்ளது என்றும், அந்த அமைப்பு குறித்த விடயத்தை கையாளும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச் சர் கெஹெலிய ரம்புக்வெல தெரி வித்தார்.

அரசையும், ஜனாதிபதியையும் விஜேதாஸ ராஜபக்ஷ விமர்சனம் செய்த காரணத்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

விஜேதாஸ ராஜபக்ஷவின் அரசி யல் வரலாறு மற்றும் அவருடைய நடத்தை பற்றி பொதுமக்கள் நன்கு அறிவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன் னைக் கடுந்தொனியில் இழிவா கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு திட்டினார் என்றும், அத னால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் நாடாளு மன்ற உறுப்பினர் விஜே தாஸ ராஜ பக்ஷ குற்றம் சுமத்தியிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தடுப்பூசியின் அடுத்த தொகுதி விரைவில்

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி நம்பிக்கை



'ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா ஜெனெகா' தடுப்பூசியின் அடுத்த தொகுதி ஏப்ரல் இறுதியில் அல்லது மே மாத தொடக் கத்தில் நாட்டை வந்து சேரும் என்று கொரோனாத் தடுப்பு நடவ டிக்கைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேதெரிவித்தார்.

அத்தோடுரஷ்யாவின்'ஸ்புட்னிக் - வி' தடுப்பூசியையும் குறித்த காலப் பகுதியில் பெற்றுக்கொள்ள எதிர் பார்த்திருப்ப தாகவும் அவர் கூறி னார்.

இந்தியாவில்,கொரோனாத்தொற்று அதிகரித்து வருவதன் காரணமாக 'அஸ்ட்ராஜெனொகா'தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் நிலவு கின்றது எனவும் இராஜாங்க அமைச் சர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக மாற்றுத் தடுப் பூசிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படு கின்றது எனவும் சுதர்ஷினி பெர் னாண்டோபுள்ளே மேலும் குறிப் பிட்டார்.

# டிப்பரில் கஞ்சா கடத்தல்!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், ஏப்.18

மன்னாரில் இருந்து யாழ்ப்பா ணத்திற்கு இன்று அதிகாலை டிப் பரில் கடத்திய கேரளக் கஞ்சா இலுப் பைக் கடவைப் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து டிப்பரில் இன்று அதி காலை 2 மணியளவில் கஞ்சா கடத்துவ தான இரகசிய தகவலின் பெயரில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது 90 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இவ் வாறு கைப்பற்றிய கஞ் சாவை கடத்திய மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இதன்போது கைது செய்யப்பட்ட மூவரும் வவுனியா, தெட்சனாம ருதமடு, நானாட்டான் ஆகிய இடங் களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகின்றது. கைது செய்யப்பட்ட மூவரையும் இலுப்பைக் கடவைப் பொலிஸார் நாளை மன்னார் நீதி மன்றில் முற்படுத்தவுள்ளனர்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ச்சைகளுக்குப் பதிலளிக்க வேண்டியது அரசின் கடப்பாடு

## விளக்கம் கோருகின்றது அஸ்கிரிய பீடம்

துறைமுக நகர ஆணைக்குழு தேசிய சட்ட கட்டமைப்பிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு பதிலளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடு. எனவே உடனடியாக மகா சங்கத்தினருக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் வலியுறுத்தினார்.

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்ட மூலம் பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பில் அஸ்கிரிய பீடத்தின் நிலைப்பாட்டை வினவிய போதே மெதகம தம்மானந்த தேரர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான சர்ச்சை தொடர்பில் அரசாங்கம் மகா சங்கத்தினருக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த விவகாரத்தில் நாட்டின் இறையாண்மைக்கும் தேசிய சொத்துக்களுக்கும் பாதகத்தை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிராக நிச்சயம் குரல் கொடுப்போம்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை நாம் எதிர்க்கவில்லை.

ஆனால் அந்த வேலைத்திட்டங்கள் எந்தவொரு வகையிலும் இலங்கையின் சட்டக் கட்டமைப்பிற்கு அப்பாற்பட்டதாக அமைந்துவிடக் கூடாது. எனவே இது போன்ற விடயங்களில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும்.

கொழும்புத் துறைமுக நகர வேலைத்திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த போது ஆரம்பிக்கப்பட்டது.

தமக்கான இலாபத்தை இலக்காகக் கொண்டு தான் இந்த வேலைத்திட்டத்தில் சீன முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கமையவே இரு தரப்பு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது ஊடகங்களில் வெளியாகின்ற செய்திகளின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் போதும் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என அறிய முடிகிறது.

இவ்வாறான நிலையிலேயே தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் துறைமுக நகர ஆணைக் குழுவிற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சட்ட மூலத்தில் நாட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்துக் கூடிய விடயங்கள் காணப்படுகின்றன எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அதன் உள்ளடக்கங்கள் தொடர்பில் முறையாக மகா சங்கத்தினருக்கும் நாட்டு மக்களுக்கும் தெளிவுபடுத்தப்படவில்லை.

ஒருபுறம் இதற்கு எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்ற நிலையில் மறுபுறம் அரசாங்கத்தின் சார்பில் அவ்வாறு எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

இவ்வாறான நிலையில் குறித்த சட்ட மூலத்துக்கு



எதிராக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலம் தொடர்பில் இவ்வாறு பரவலாக விமர்சிக்கப்படுகின்றமையால் அரசாங்கத்தால் இதன் உண்மை நிலைமை என்ன என்பது தொடர்பில் மகா சங்கத்தினருக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

எனவே ஆளுந்தரப்பினர் அல்லது இந்த விவகாரத்துடன் தொடர்புடைய அரச அதிகாரிகள் மகா சங்கத்தினரைச் சந்தித்து இது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் என்று கோருகின்றோம்.

அவ்வாறில்லை எனில் முழுமையான விவரங்களை அறியாமல் எம்மால் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது.

ஆனால் அரசாங்கம் எந்தவொரு வேலைத்திட்டத்தை முன்னெடுத்தாலும் அதனை நாட்டின் சட்ட கட்டமைப்பிற்குட்பட்டதாக ஒழுக்கத்துடன் முன்னெடுக்க வேண்டும். மாறாக அவை நாட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தால் அதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு நாம் பின்வாங்கப் போவதில்லை.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை.

ஆனால் அந்த வேலைத்திட்டங்கள் நாட்டின் இறையாண்மைக்கும் தேசிய வளங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவனவாக அமையக் கூடாது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் இவ்வாறான சிக்கல்களே காணப்பட்டன. எனினும் நாட்டு மக்கள், தொழிற்சங்கங்கள், மகா சங்கத்தினர் உள்ளிட்டோரின் ஐக்கியத்தால் இதனை இந்தியாவிற்கு வழங்குவதை தடுக்க முடிந்தது.

எனவே இவ்வாறு நாட்டுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த சட்ட மூலம் காணப்பட்டால் அதற்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

எந்தவொரு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாயினும் அதில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு தெரிவிப்பது சாதாரண விடயமாகும். ஆனால் அரசாங்கத்திற்குள்ளேயே இதற்கு எதிர்ப்புக்கள் வெளியாகின்றன என்றால் அது தொடர்பில் நிச்சயம் அவதானம் செலுத்த வேண்டும். எனவே தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள், அதற்கான காரணி தொடர்பில் அரசாங்கம் மகாசங்கத்தினருக்கு தெளிவுபடுத்த வேண்டும். - என்றார்.

# வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்க பாரிய முயற்சிகள்

**இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவிப்பு**

கொழும்பு, ஏப். 19

முதலீடுகளை மேற்கொள்வதற்கான பின்புலம் இருந்தால் மாத்திரமே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டை நோக்கி வருவார்கள். அதற்கான பின்புலமே கொழும்பு துறைமுக நகரம் ஆணைக்குழுச் சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை மீண்டும் வலுப்படுத்துவோமென நாம் கூறியிருந்தோம். அதன் பிரகாரம் மீண்டும் ரூபாவின் பெறுமதி அதிகரித்து வருவதைக் காணலாம்.

ஆனால், ரூபாவின் பெறுமதியை மீண்டும் வலுவாக்க முடியாதென எதிர்க்கட்சியிலிருந்து பொருளாதார நிபுணர்கள் கூறி குறுகியகால நன்மையை அடைந்திருந்தனர்.

அதேபோன்றுதான் தற்போது கொழும்பு துறைமுக நகரத்திட்டம் தொடர்பிலும் கூறுகின்றனர். கடன்களுக்குப் பதிலாக நாட்டுக்கு புதிய வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவரும் ஒரு வேலைத்திட்டமே துறைமுக நகரத்தின் ஊடாகச் செய்ய முற்படுகிறோம்.

முதலீட்டாளர்களுக்கு முதலீடுகளை இலகுவாக மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலேயே துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரச் சட்டம் எந்த விதத்திலும் நாட்டுக்குப் பாதகமானதல்ல. புதிதாக 83 ஆயிரம் தொழில்கள் இங்கு உருவாகும். இவ்வாறு 83 ஆயிரம் தொழில் வாய்ப்புகள் எமக்கு கிடைக்கப்பெற்றால் டொலர்கள் வெளியில் செல்லாது நாட்டுக்குள்ளேயே இருக்கும்.

டுபாய், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு இலகுவாக வெளிநாட்டு முதலீடுகள் வரவில்லை. முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்பட்டதன் பின்னரே அந்த விடயம் சாத்தியமானது.

போட்டிமிக்க சந்தை சூழலில் முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமெனில் அதற்கான பின்புலத்தை நாட்டில் உருவாக்க வேண்டும். அதனையே செய்து வருகிறோம்.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் ஒரு கோடியே 50 லட்சம் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு முதலீடாக வருமென நாம் எதிர்பார்க்கிறோம்.

தற்போதைய சூழலில் 1,500 கோடி அமெரிக்க டொலர்கள்தான் எமக்கு முதலீடாக வருகின்றன. ஒரு கோடியே 50 லட்சம் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு முதலீடுகள் வருமானால் நாட்டில் பாரிய அபிவிருத்திகள் ஏற்படும். புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். தேசிய வருமானம் அதிகரிக்கும். - என்றார்.

# ஆஸ்திரேலியாவில் குடும்பஸ்தருடன் இணைய 10 ஆண்டுகளாகக் காத்திருக்கும் உறவுகள்

கொழும்பு, ஏப். 19

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறி ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்த பல ஆப்கான் அகதிகள், அகதிகளாக அங்கீகரிக்கப்பட்ட போதும் அவர்களது மனைவி மற்றும் குழந்தைகளை ஆஸ்திரேலியாவுக்கு அழைப்பதற்கான விசாவைப் பெற பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதாக அல்லது அந்த விசாவைப் பெறுவதே சாத்தியமற்றதாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரிலிருந்து நான்கு மணிநேர பயணத் தூரத்தில் உள்ள ஸ்வான் ஹில் ஆஸ்திரேலியாவின் உணவுக் கிண்ணமாக வர்ணிக்கப்படுகிறது. பெருமளவிலான பாதாம் பருப்பும் திராட்சைகளும் தயாரிக்கக்கூடிய பகுதியாக இது இருக்கிறது.

இப்பகுதியில் பெரும் உற்பத்தி நடக்கக் கூடிய காலங்களில், பல அகதிகள் உட்பட சுமார் 10 ஆயிரம் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகள், பாதுகாப்பான சமூக வாழ்க்கையைத் தேடி வருகின்றனர். இப்பகுதியில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பல அகதிகள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களில் ஒருவரான 'அலி', கடந்த 2009 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறி ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்த பொழுது, அவரது 6 குழந்தைகளையும் கர்ப்பிணி மனைவியையும் பிரிந்து வர வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகும் அந்த நிலை மாறவில்லை. அவரது குழந்தைகளையும் மனைவியையும் இத்தனை ஆண்டுகளாகக் காணாமல் இருக்கின்றமை ஆப்கான் அகதியான அலியை மனதளவில் பெரிதும் பாதித்துள்ளது.

'என் குழந்தைகளைப் பிரிந்து 11 ஆண்டுகள் ஆகிவிட்டன. தொலைபேசி வழியாக மட்டுமே அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன் என்கிறார் அலி. 65 வயதான அவர், ஆப்கானிஸ்தானில் உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள ஹசாரா சமூகத்தைச் சேர்ந்தவர். போர் சூழல் காரணமாக அவர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் படகு வழியாக தஞ்சமடைந்திருக்கிறார்.

ஆஸ்திரேலியாவில் அவர் அகதியாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர், தனது குடும்பத்துக்கு விசாக்கள் பெற சுமார் 10 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்களை செலவழித்திருக்கிறார். ஆனால், படகு வருகைகள் தொடர்பான ஆஸ்திரேலிய அரசின் கடுமையான குடிவரவுக் கொள்கைகளால் ஆப்கான் அகதியான அலியால் அவரது குடும்பத்தினருக்கு விசா பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு படகு வருகைகளை ஆஸ்திரேலியாவின் மனிதாபிமான திட்டத்திலிருந்து அப்போதைய லேபர் அரசாங்கம் நீக்கியது. இதனால் படகு வழியாக தஞ்சமடைந்த அகதிகள் தங்கள் குடும்பத்தினரை அழைப்பது என்பது சாத்தியமற்றதானது. பின்னர் வந்த லிபரல் அரசாங்கமும் படகு வழியாக வந்து நிரந்தரமாக ஆஸ்திரேலியாவில் வாழும் அகதிகள் சமர்பிக்கும் குடும்ப மீள் ஒன்றிணைவுக்கான விசாக்களுக்கு குறைந்த அளவிலான முன்னுரிமையையே வழங்கும் நிலை உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவிலிருந்து 281 பேர் குணமடைவு

இலங்கையில் கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 281 பேர் குணமடைந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 93 ஆயிரத்து 113 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 96 ஆயிரத்து 439 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 2 ஆயிரத்து 709 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேநேரம் கொரோனாத் தொற்றால் நாட்டில் இதுவரையில் 617 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2 ஆம் கட்ட கொரோனா தடுப்பூசி தொடர்பான தீர்மானம் இன்று

இலங்கையில் 2 ஆம் கட்டமாக ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கொரோனாத் தடுப்பூசி செலுத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று (திங்கட்கிழமை) மேற்கொள்ளப்படுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

தொற்று நோய் தடுப்பு பிரிவில், இன்று பிற்பகல் 2 மணியளவில் நிபுணர் குழு கூடவுள்ளது.

இதன்போது அஸ்ட்ராஜெனெகா கொரோனாத் தடுப்பூசியை 10 அல்லது 12 வாரங்களிலா செலுத்துவது என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்' என அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## மின்சாரம் தாக்கி யானைகள் சாவு மறைக்க முயன்றவர் கைது

மொனராகலை - மாலிகாவில மினிபுர கிராமத்தில் அண்மையில் பயிர்செய்கை நிலமொன்றில் மின்சார கம்பியில் சிக்கி காட்டு யானை ஒன்றும் யானைக் குட்டியொன்றும் உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவத்தை மறைப்பதற்காக நில உரிமையாளர் உயிரிழந்த யானையை தீ வைத்து எரித்துள்ள நிலையில், இறந்த யானைக் குட்டியை புதைத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வன விலங்கு அதிகாரிகளுக்கு தெரிய வந்துள்ளதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை நில உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.






# போதைப்பொருள்களைப் பாவித்துவிட்டு 80 வீத சாரதிகள் பஸ் செலுத்துகிறார்கள்!

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பில் வாகன நெரிசல் அதிகமாக காணப்படும் வீதிகளில் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகளில் 80 சதவீதமானோர் போதைப் பொருள் பாவனையுடன் பஸ் களைச் செலுத்துகிறார்கள்.

இது மிகவும் பாரதூரமான செயற்பாடாகும். போதைப்பொருள் பாவித்து பஸ் செலுத்தும் சாரதிகளைக் கண்காணிக்கும் நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வீதி விபத்து சம்பவங்கள் இடம்பெறுவதற்கு போதைப்பொருள் பாவனை பிரதான காரணியாக காணப்படுகிறது.

பண்டிகைக் காலத்தில் அதிகளவான வீதி விபத்துக்களும், வீதி விபத்துக்களால் மரணங்களும் பதிவாகியுள்ளன. இதற்குப் போதைப் பொருள் பாவனை பிரதான காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பில் வாகன நெரிசல் அதிகமாகவுள்ள பகுதிகளில் போக்குவரத்துநடவடிக்கைகளில் ஈடுபடும் தனியார் பஸ்சாரதிகளில் 80 சதவீதமானோர் பல்வேறு வகையான போதைப்பொருள்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இவர்கள் போதைப்பொருள்களைப் பயன்படுத்திய வண்ணம் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுப்படுகிறார்கள். இது மிகவும் பாரதூரமான செயற்பாடாகும்.

போதைப்பொருள்களைப் பாவித்து போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் சாரதிகள் தொடர்பில் கண்காணிக்க உரிய நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன்னர் மருத்துவ பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

குறித்த நபர் ஒரு மாத காலத்துக்கு முன்னர் பாவித்த போதைப் பொருள் தொடர்பில் பரிசோதனை செய்யும் புதிய வழிமுறை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு செல்ல போக்குவரத்து அமைச்சரால் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

பண்டிகையை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் சென்றுள்ள பொது மக்கள் மீண்டும் தங்களின் சேவை பிரதேசங்களுக்கு வருகை தர விசேட போக்குவரத்து சேவை தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவைக்காக 200 அரச பஸ்கள் மேலதிகமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. - என்றார்.

# பிள்ளைகளால் தாக்கப்பட்டு பெற்றோர் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு

## கவலைக்குரியதென்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கிளிநொச்சியில் மகனால் தாக்குதலுக்குள்ளான தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி மகனால் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த குறித்த தந்தை சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 11 ஆம் திகதி கிளிநொச்சி - கனகபுரம் பிரதேசத்தில் 20 வயது மகனால் 53 வயதுடைய தந்தை தாக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு மகனால் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த தந்தை சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன.

கடந்த சில மாதங்களாக இவ்வாறு பிள்ளைகளால் தாக்கப்பட்டு பெற்றோர் காயமடைதல் அல்லது உயிரிழத்தல் போன்ற சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன. இது மிகவும் கவலைக்குரிய நிலைமையாகும்.

இவ்வாறான சம்பவங்களைத் தவிர்ப்பதற்கான விசாரணைகள் பொலிஸாரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் இதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகும். - என்றார்.

# உலக திருமதி அழகிக்காக கொழும்பில் ஒன்றுகூடிய 20 இற்கும் மேற்பட்ட அழகிகள்; தொடரும் சர்ச்சை

கொழும்பு, ஏப். 19

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற இலங்கைக்கான திருமதி அழகு ராணி போட்டியின் இறுதி 20 போட்டியாளர்கள் கொழும்பில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினர்.

இதில் குறித்த நிகழ்ச்சி அமைப்பாளர்கள் தங்களை ஏமாற்றிவிட்டனர் என அவர்கள் குற்றம் சாட்டினர்.

புஷ்பிகா டி சில்வாவுக்கு கிரீடம் கொடுக்கப்பட்டமை தொடர்பில் அவர்கள் அதிருப்தியை வெளிப் படுத்தியுள்ளனர்.

இந்த போட்டியில் முதலில் முன் வைக்கப்பட்ட விதிகள் தொடர்பாகத் தெளிவற்ற தன்மை இருக்கின்றது என அவர்கள் கூறினர்.

மேலும் அனைத்துப் போட்டியாளர்களும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும், தங்கள் கணவர்களும் சாட்சிகளாக வரும்படி கூறப்பட்டதாகவும் பின்னர் அந்த நிபந்தனை புறக்கணிக் கப்பட்டதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

போட்டியில் நடைபெறவிருந்த கணவருடனான காட்சி இந்த முறை ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறினர்.

உலக திருமதி அழகியான கரோலின் ஜூரியின் நடத்தை சரியானது என்றும், இந்த குழு புஷ்பிகா டி சில்வா மீது சிறப்புக் கவனம் செலுத்தி வருவதாகவும், அவர் வெற்றி பெற திட்டமிட்டுள்ளார் எனத் தெரிகிறது என்றும் அவர்கள் கூறினர்.

# என்னைக் கொலைசெய்ய முடியும் எனது வாயை அடைக்கமுடியாது

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் காட்டம்

தன்னைத் திட்ட ஜனாதிபதிக்கு முடியாது என நாராஹென்பிட்டி அபயாராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள வலையொளி தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

என்னைக் கொலை செய்ய முடியும், ஆனால் எனது வாயை அடைக்க முடியாது. கொழும்பு துறைமுக நகரம் ஊடகத் தனியான வேறு நாடு உருவாகும். உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு நான் இதனைச் செய்யவில்லை. வாகனங்கள் மற்றும் கட்டடங்களை வழங்கி என்னை விலைக்கு வாங்க முடியாது.

என்னை சஜித் பிரேமதாஸ வழிநடத்துவதாகக் கூறிய கருத்து, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்மகேவின் உண்மைக்குப் புறம்பான கதை.

மற்றைய பிக்குமார் தற்போது பணம், வாகனங்களுக்காக தமது வாய்களை மூடிக்கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தை எதிர்த்தால், எமக்குக் கிடைக்கும் சலுகைகள் கிடைக்காமல் போகும் என்பதால், அவர்கள் அமைதியாக இருக்கின்றனர் எனவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org